வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.03.2023 வியாழக்கிழமை | இதழ் : 90 | பக்கங்கள் : 16




# உள்ளக பொறிமுறையின் மூலம் நல்லிணக்கம் நிலைநாட்டப்படும்!

## ஐ. நாவில் இலங்கை உறுதியளிப்பு

ஜெனிவா, மார்ச் 10

சுயாதீன உள்ளகப் பொறிமுறைகள் ஊடாக மனித உரிமைகளையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதில் இலங்கை உறுதியாக இருக்கின்றது. இதற்கமைய அரசமைப்பின் பிரகாரம் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பது குறித்தும் இலங்கைக்கு பொருந்தக்கூடிய முறை எதுவென்பது குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

- இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுக்கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான

16

# பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குக!

## மனித உரிமைகள் ஆணையர் வலியுறுத்து

ஜெனிவா, மார்ச் 09

**இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஆரம்பமானது. இம்முறை கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பில் விசேட விவாதங்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் பேரவையில் இலங்கை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஆணையாளர் வொல்கர் டர்க், இலங்கை முகங்கொடுத் திருக்கும் பொருளாதார நெருக்கடி

16

# கோதுமை மா, பாண் விலைகள் குறைப்பு!

கொழும்பு, மார்ச் 09

நேற்று முதல் அமுலாகும் வகையில் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிறீமா மற்றும் செரண்டிப் கோதுமை மாவின் விலைகள் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாணின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

16

## பருப்பு, சீனியின் விலைகள் குறைவு

கொழும்பு, மார்ச் 09

ரூபாயின் பெறுமதி வலுவடைந்ததால் ஒரு கிலோ சீனியின் விலை 30 ரூபாயாலும் பருப்பின் விலை 40 ரூபாயாலும் (மொத்தவிலை) குறைவடைந்துள்ளது.

இதன்படி, வெள்ளைச் சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றின்

16

# பல்கலை. மாணவர் போராட்டம்மீது நேற்றும் கண்ணீர் குண்டுகள் வீச்சு



கொழும்பு, மார்ச் 09

கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் நேற்று நடத்திய போராட்டத்தை தொடர்ச்சியாக கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும் பொலிஸார் கலைத்தனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையின்போது கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவர்களும் வீதியில் பயணித்தவர்களும் பாதிப்புகளை எதிர்கொண்டனர்.

அனைத்து பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம் நேற்றுமுன்தினம் நடத்திய போராட்டத்தின் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியமைக்கும் தண்ணீர்

16

## நெல்லியடியில் 33 பவுண் நகை திருட்டு

வடமராட்சி, மார்ச் 09

பட்டப்பகலில் வீடுடைத்து 33 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இவ்வாறு திருடப்பட்ட நகைகள் 58 இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தியில் நேற்று பகல்வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

திருட்டு இடம்பெற்ற வீட்டில்

16

## பாதுகாப்பற்ற நிலையில் மூன்றரை இலட்சம் சிறார்!

கொழும்பு, மார்ச் 09

பல்வேறு காரணங்களால் சுமார் 3 இலட்சத்து 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் - அதாவது 10 வீதமான சிறுவர்கள் பாதுகாப்பற்று உள்ளனர் என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் ஆய்விலேயே மேற்படி விடயம் தெரிய வந்துள்ளது.

16

காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி

# முல்லைத்தீவு போராட்டம் ஆறு ஆண்டுகள் நிறைவு!



முல்லைத்தீவு, மார்ச் 09

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக நீதி கோரி முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைந்தன.

இதையொட்டி, நேற்று அப்பகுதியில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நகரில் நடைபெற்ற

16

# குருந்தூர்மலை விவகாரத்தில் இராணுவம் மறைமுக திட்டம்!

## கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, மார்ச் 09

குருந்தூர்மலை விவகாரத்தில் இராணுவத்தினர் புவிச்சரிதவியல் திணைக்களத்துடன் சேர்ந்து மறைமுக திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் அடையாளங்கள் அவர்களுடைய இருப்புகள் அழிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் ஒரு நல்லிணக்கவாதி என்ற விம்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றார்.

புவிச்சரிதவியல் இடமாக 1932ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் அடையாள காணப்பட்ட இடங்கள் மீண்டும் கட்டியெழுப்பப் படுகின்றன. இராணுவத்தினர் புவிச்சரிதவியல்

16

# 'வடக்கின் பெரும்போர்' இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்ட போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

116ஆவது ஆண்டாக நடக்கும் இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக மூன்று நாள்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

16

# தபால் மூல வாக்களிப்பை 28 - 31 வரை நடத்த திட்டம்!

## 21 முதல் வாக்குச் சீட்டு விநியோகம்

கொழும்பு, மார்ச் 09

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி

16

# இப்படியும் நடக்கிறது...!

லண்டனிலிருந்து பேசிய நண்பர் ஒருவர் கேட்டார், 'இந்த பதின்மூன்றாவது அரசியலமைப்பு சட்டத்திற்கு ஆதரவாக நமது தலைவர்கள் ஏன் பகிரங்கமாக குரல் கொடுக்கிறார்கள் இல்லை' என்று.

அப்போது, முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் அண்மையில் ஒரு தனிப்பட்ட வைபவம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தபோது சொன்ன தகவலை அவருக்கு பதிலாகச் சொன்னேன்.

நாட்டின் முக்கிய தலைவர் அவர். அவர் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றில் சொன்னாராம், 'தன்னைச் சந்திக்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோரும், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துங்கள். தமிழர்கள் எல்லோரும் திருப்தி அடைவார்கள் என்று. ஆனால், நாங்கள் எப்போதும் சமஷ்டிதான் தேவை என்றுதான் கேட்டுக்கொண்டிருப்போம்' என்று.

பதின்மூன்றைக் கொடுத்தால் மக்கள் திருப்தியடைவார்கள் என்று சொல்லும் தலைவர்கள் - அதாவது, அதே மக்களின் பிரதிநிதிகள், அந்த மக்களின் விருப்பத்துக்கும் மாறாக தொடர்ந்து எதையாவது கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்றால், அவர்கள் யாருக்காக கேட்கிறார்கள்? என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அதாவது, பதின்மூன்றை ஏற்றுக் கொண்டுவிட்டால் ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கிவிட்டார்கள் என்று சிலர் கூறிக்கொண்டு புறப்பட்டுவிட்டால் அவர்களின் கருத்துக்குப் பின்னால் மக்கள் சென்றுவிடுவார்களோ என்ற பயம் காரணமாக இருக்கலாம் என்றார் அந்த நண்பர்.

ஆக, நமது மக்கள் பிரதிநிதிகள் தமது எதிரணி அரசியல்வாதிகளுக்காகத்தான் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்களோ என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

தமிழகம் எமது தொப்புள் கொடி. இந்தியா எமது பிரச்னையில் எமக்கு ஆதரவாக எப்போதும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றவர்கள் நாம்.

ஆனால், இந்தியா எமக்காகக் குரல்கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற நாமே, இந்தியா பற்றியும் அக்கறை கொள்கிறோமா என்றால் அதுதான் இல்லை.

இந்தத் தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றோம்.

கடலில் மீன் பிடிக்கப்போகின்ற ஒரு மீனவர், அதுவும் பாரம்பரிய முறையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள், கடலில் செல்லும் போது நவீன கருவிகள் எதனையும் எடுத்துச் செல்வதில்லை.

ஒரு நாட்டின் கரையிலிருந்து பன்னிரண்டு கடல் மைல் தூரம் சென்றால் அவர்கள் சர்வதேச கடல் எல்லைக்குள் பிரவேசித்து விடுவார்கள். ஆனால், மன்னார் குடா கடலில் பன்னிரண்டு கடல்மைல் போனால் அது இந்திய கடல் எல்லைக்குள் போனதாகிவிடும். அதேபோல, இந்திய மீனவர்கள் இந்தியக் கரையிலிருந்து பன்னிரண்டு கடல் மைல் போனால் இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்துவிடுவார்கள்.

ஆக, இரண்டு தரப்பு மீனவர்களும் எல்லை தாண்டி மீன்பிடிப்பது என்பது தவிர்க்கமுடியாததுதான். ஆனால், அதற்காக நமது கடலில் நாம் தடை செய்து வைத்திருக்கின்ற இழுவைமடி மீன்பிடியை அனுமதிப்பதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இது நமது மீன் வளத்தையே இல்லாமல் செய்துவிடும் என்பது நமது மீனவர்களின் கவலை. அதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

முதலில் நமது கடலில் மீன்வளம் பாதுக்காக்கப்பட வேண்டும். அதற்காக நாம் தடை செய்துவைத்திருக்கின்ற மீன்பிடி முறையை எவரும் மேற்கொள்வதற்கு அனுமதியளிக்க முடியாதுதான்.

நாம் சொல்ல வருவது, அதுபற்றியல்ல. அண்மையில், வடக்கு கடல் தொழிலாளர் சங்கங்களுக்கும் தமிழ் அரசியல் பிரமுகர்களுக்குமிடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றிருந்தது.

அந்த சந்திப்பில், இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் யோசனைக்கு முழுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதென வடக்கு மாகாண கடல் தொழிலாளர் சங்கங்களுக்கும், தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் தமது முடிவை இலங்கை, இந்திய, தமிழக அரசுகளுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதுடன், மக்கள் போராட்டமொன்றை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

இது இலங்கை - இந்தியா என்ற இரண்டு நாடுகளுக்கிடையிலான பிரச்னை அல்ல. இது தமிழக மீனவர்களுக்கும் ஈழத்தமிழ் மீனவர்களுக்குமான பிரச்னை. அதனை 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்று கையாள்வது புத்திசாலித்தனமானது அல்ல.

எடுத்ததற்கெல்லாம் தமிழகம் எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, தமிழக மீனவர்களை அனுமதிக்க மாட்டோம் என்றும் 'சண்டித்தனம்' செய்வது புத்திசாலித்தனமானதுதானா என்றும் யோசிக்கவேண்டும்.

இங்கே இருக்கும் மீனவர் சமூகத்தின் வாக்குகளும் தேவை. இந்தியா - தமிழகம் எமக்கு உதவவும் வேண்டும் என்று நினைப்பது எவ்வளவு தூரம் நியாயமானது என்பது தெரியவில்லை.

நமது மக்கள் பிரதிநிதிகள் தங்கள் குடும்பங்களின் பாதுகாப்பு என்றதும் சென்னைக்கு ஓடுபவர்கள். அவர்களுக்கு தமிழகம் அந்நிய இடமன்று. அங்கு சென்று தமிழக அரசியல் தலைவர்களை சந்தித்துப் பேசி, நமது பிரச்னைகளை எடுத்துச் சொல்லவேண்டும். நாம் எதற்காக இழுவைமடி மீன்பிடியை தடை செய்திருக்கிறோம் என்பதை தெளிவுபடுத்தி, அதனை தமிழகமும் முற்றாக தடை செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். அவர்களும் பாரம்பரிய முறையில் மாத்திரம் மீன்பிடியில் ஈடுபடுகின்றபோது அவர்கள் எல்லை தாண்டி வந்தாலும், நாங்கள் எல்லை தாண்டி சென்றாலும் பரஸ்பரம் உறவோடு அதனை பார்க்கவேண்டும் என்ற மனநிலையை உருவாக்கவேண்டும்.

அதைவிடுத்து, பதின்மூன்றும் வேண்டும், தமது வாக்குகளும் போய்விடக்கூடாது என்று இரட்டைக்காலில் நிற்பதுபோல, இந்த விவகாரத்திலும் நிற்கக்கூடாது!

**- ஊர்க்குருவி**

# மின் கட்டணத்தை குறைக்க முடியும்!

கொழும்பு, மார்ச் 09

புதிய மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் உட்பட அனைவரும் ஆதரவளித்தால் எதிர்வரும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.



நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

"எதிர்க் கட்சித் தலைவர் தவறான கேள்வியொன்றை முன்வைத்தார். பொதுமக்கள் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டதாகக் கூறினார்.

அவ்வாறு இல்லை. பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடனேயே மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின்படி மின்கட்டண திருத்தத்துக்கு அங்கீகாரம் கிடைத்தது.

ஓர் உறுப்பினரின் எதிர்ப்பை ஒட்டுமொத்த உறுப்பினர்களினதும் எதிர்ப்பாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆணைக்குழுவில் ஐந்து உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களில் மூவரின் அங்கிகாரம் கிடைத்தது. அந்த வகையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் அங்கிகாரத்துடனேயே மின்கட்டண திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தவிசாளர் மட்டுமே மின்கட்டண அதிகரிப்பு எதிர்ப்பை தெரிவித்தார்.

மின்சார சபை எதிர்கொண்டுள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்காக மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை.

மின்சார உற்பத்தியை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கே மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

மின்சார சபையின் ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்வதற்கு நாம் யோசனைகளை முன்வைத்துள்ளோம். எனினும் அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர்.

சில தொழிற்சங்கங்களின் அதிகாரிகள் அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

நுகர்வோருக்கு இன்று சீரான மின்விநியோகம் வழங்கப்படுகின்றது.

மின்வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தித் திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். மின் கட்டண அதிகரிப்பினூடாக சீரான மின்விநியோகத்தை வழங்க முடிந்தது.

புதிய மின்சார உற்பத்தித் திட்டம் செயற் படுத்தப்படுமாயின் எதிர்வரும் டிசெம்பர் மாதம் மின்கட்டணத்தை குறைக்க முடியும்.

ஜூலை மாதத்துக்குள்ளும் மின்கட்டணத்தை குறைக்க முடியும்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டம் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். அந்தத் திட்டத்திற்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கினால் ஜூலை மாதத்திற்குள் மின் கட்டணத்தை குறைக்க முடியும்" - என்றார்.

(அ)

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு தீர்வு தேவை!

## சார்ள்ஸ் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி மற்றும் அதிகாரிகள் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை வரவேற்கிறோம். சிறந்த திட்டங்களை முழுமையாக வரவேற்போம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்த சபையில் உரையாற்றும்போது நிதி அமைச்சர் என்ற வகையில் தானும் மத்திய வங்கி ஆளுநரும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளில் கையெழுத்திட்டு நிறைவேற்றியதாக நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்தார்.

இதனை நல்ல விடயமாக நாங்கள் பார்க்கின்றோம். பொருளாதார ரீதியில் அவரினதும் அவரின் அதிகாரிகளினதும் திறமையாக இதனை பார்க்கின்றேன். பொருளாதார நிலைமைகளுக்கு ஈடுகொடுப்பதற்காக முன்னெடுத்த இந்த வேலைத் திட்டங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

குறைபாடுகளை கூறினாலும், நல்ல விடயங்களுக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். ஜனாதிபதியிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அதில் வட மாகாணத்திலுள்ள கடல்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதால் எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது தொடர்பில் நிரந்தர தீர்வை ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்திய மீனவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக கூறப்படுவதை தொடர்ந்து வடக்கில் மீனவர்களிடையே கொந்தளிப்பு நிலைமை காணப்படுகிறது. எமது மீனவர்களுக்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. வெளிநாட்டவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்குவதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

(ஐ)

# சிறி சுமண தேரருக்கு நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு, மார்ச் 09

திலினி பிரியமாலிக்கு உதவினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிணையில் உள்ள பொறளை சிறிசுமண தேரரை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலையாகததாலேயே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்த்தன உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
09.03.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ராஜபக்ஷக்கள் மீண்டும் வெற்றிபெறுவார்களா?

உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமா - அல்லது நடைபெறாதா என்பது தொடர்பில் திடமான பதிலை கூறமுடியாத நிலைமை காணப்படுகின்றது. தேர்தல் ஆணைக் குழு திகதியை அறிவிக்கின்றது. தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிடுகின்றது. ஆனால், மறுபுறம் ஜனாதிபதியோ, இது தேர்தலுக்கான காலமல்ல என்கின்றார். அதேவேளை நாடு பொருளாதார ரீதியில் மீண்டெழுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது. பிறிதொரு புறம் வரி விதிப்புக்கு எதிராக, இன்று முதல் தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தொழில்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தேர்தல் நடைபெற்றால் தாமே வெற்றி பெறுவோமென்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். அரசியல் வாதிகள் அவ்வாறுதான் கூறுவார்கள் - ஆனால், உள்ளூராட்சி தேர்தலொன்று குறிப்பிட்டவாறு இடம்பெற்றால் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவால் பிரமாண்டமான வெற்றியை பெறமுடியுமா? அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா? ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியால் அதிசயங்கள் எதனையும் புரிய முடியாது - அந்தளவுக்கு கட்சி வீழ்சியடைந்திருக்கின்றது.

ரணிலுக்கு தற்போதுள்ள தெரிவு, பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பயணித்து தனது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதுதான். ஆனால், தேர்தல் முடிவுகள் தொடர்பில் எவருமே ஆருடங்களை கூறமுடியாது. ரணில் தொடர்பில் சாதகமான அபிப்பிராயங்கள் இருந்தாலும் அவை வாக்குகளாக மாறுமா என்பதற்கு உத்தரவாதமில்லை. ஒருவேளை, ரணில் - ராஜபக்ஷ கூட்டணியில், பொதுஜன பெரமுனவின் கை ஓங்குமாயின் ரணில் அவர்களை சார்ந்தே இயங்க வேண்டியேற்படும் - அவ்வாறான சூழலில், மீண்டும் ராஜபக்ஷக்களின் குடும்ப நிழலுக்குள் ரணில் சிக்குப்பட நேரிடும்.

ராஜபக்ஷக்கள் பெரியளவில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பில்லையென்னும் எதிர்பார்ப்பே மேலோங்கியிருக்கின்றது. இவ்வாறான எதிர்பார்ப்புகளை மீறியும் பொதுஜன பெரமுன வெற்றிபெற்றுவிட்டால் ராஜபக்ஷக்களை வீழ்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் வீணாகும். 2015இல் ஜனாதிபதி தேர்தலில் வீழ்ச்சியுற்ற ராஜபக்ஷக்கள், 2018இல் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் மூலம் மீண்டும் எழுச்சியுற்றனர். ரணில் - மைத்திரி ஆட்சியின் தோல்வி, ஈஸ்டர் தாக்குதலால் ஏற்பட்ட அச்சம் ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு, கோட்டாபய ராஜபக்ஷவால் பெரிய வெற்றியை பெறமுடிந்தது. கோட்டாபயவின் வீழ்ச்சியை தொடர்ந்து, ராஜபக்ஷக்களின் அரசியல் சாம்ராச்சியம் சரிந்தது. இல்லை, நாங்கள் சரியவில்லை - தேர்தல் இடம்பெற்றால், மீண்டும் எழுவொமென்று ராஜபக்ஷக்கள் சூளுரைக்கின்றனர்.

போலியான பௌத்த தேசியவாத சகதிக்குள் சிக்கிக்கிடக்கும் அடித்தள சிங்கள மக்கள் மீண்டும் ராஜபக்ஷக்களை தெரிவுசெய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், ஒருவேளை ராஜபக்ஷக்கள் மீண்டும் தங்களின் எழுச்சியை தேர்தலில் நிரூபித்தால் நாடு மீண்டுமொரு நெருக்கடிக்குள் சிக்கலாம். மேற்குலகம் அழுத்தங்களை அதிகரிக்கலாம். ஏனெனில், மேற்குலகத்தால் ராஜபக்ஷக்கள் வெறுக்கப்படுகின்றனர். அண்மையில், கனடிய அரசாங்கம் ஒரே நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ மீது தடைவிதித்திருந்ததை இந்த பின்புலத்தில்தான் நாம் நோக்க வேண்டும்.

எனவே, ராஜபக்ஷக்கள் எழுச்சியுற்றால் நாடு மீண்டும் நெருக்கடிக்குள் சிக்கும். பொருளாதார நெருக்கடியிலிருந்து பெரியளவில் மீண்டெழ முடியாத சூழலே ஏற்படும். இந்த இடத்தில் ரணில் போன்ற ஒரு கவசம் ராஜபக்ஷக்களுக்கு நிச்சயம் தேவை. இதுதான் ரணிலுக்கு சாதகமாகவுள்ள விடயமாகும். மற்றும்படி, ரணில் என்னதான் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டாலும் - வெளிநாடுகளின் ஆதரவை பெற்றாலும் அடித்தள சிங்கள மக்களின் ஆதரவை ரணிலால் இலகுவாகப் பெற்றுவிட முடியாது. ரணிலிடம் அவ்வாறான ஜனவசியமும் இல்லை. அதற்கான அடிமட்ட அரசியல் கட்டமைப்புக்களும் இல்லை. ஆனால், அவ்வாறான கட்டமைப்பு பொதுஜன பெரமுனவிடம் உண்டு.

# தமிழ் தேசிய கட்சிகள் இணைவு தமிழரசு செயல்குழுவில் முடிவு!

## மாவை சேனாதிராசா அறிவிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 09*

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழரசு கட்சியின் மத்திய செயல் குழு கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைந்த செயல்பாடு தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயல் குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒன்றிணைந்த செயல்பாடு தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பிலான நடவடிக்கைகளால் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், இது நிரந்தர முடிவுகள் அல்ல. தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வு மற்றும் உடனடி பிரச்னை தீர்வுகளுக்காக நாம் ஒன்றிணைந்தே செயல்பட வேண்டும்.

ஏற்கனவே, எமது பிரச்னைகளை தீர்த்துக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி அதனை விரைவாக தீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக காணிவிடுவிப்பு, மீள்குடியேற்றம், 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன.

ஆனால், தற்போதைய சூழலில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த பௌத்த பிக்குகள் எதிர்க்கின்றனர். 13ஆவது திருத்தத்தை நடைமுறைபடுத்துவது, இனப்பிரச்னை தீர்வு விடயங்களில் பௌத்த தேரர்களும் தென்னிலங்கை கட்சிகள் நடந்து கொள்ளும் விதம் தொடர்பில் நாம் கவலை கொண்டுள்ளோம். இந்த விடயங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருடைய நிலைமை எமக்கு கவலை தருவதாகவும் ஏமாற்றமாகவும் இருக்கின்றது.

இத்தகைய விடயங்களில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படுவதே கட்டாய தேவையாக உள்ளது. இதனை விரைவில் நாம் செயல்படுத்த ஒன்றிணைவோம் - என்றார். (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனையில் இலவச கண்புரை சத்திர சிகிச்சை!

## நோயாளரை பதிவு செய்ய கோரிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 09*

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை (கற்றாக்) சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவச கண் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும், இதற்கான நோயாளர்களை தெரிவுசெய்யும் கண்பரிசோதனை முகாம்கள் பின்தங்கிய பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தப்படவுள்ளன.

இதன்பிரகாரம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் இரண்டாவது கண்பரிசோதனை முகாம் வேலணை, மருதங்கேணி பிரதேச மருத்துவமனைகளில் நடைபெறவுள்ளன.

எனவே, கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)

# கியூ. ஆர். பங்கீடு முறையில் மாற்றம்!

*கொழும்பு, மார்ச் 09*

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் நள்ளிரவில் கியூ. ஆர். பங்கீடு புதுப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதுவரை, கியூ. ஆர். மூலமான எரிபொருள் ஒதுக்கீடு ஒவ்வொரு வாரமும் ஞாயிறு நள்ளிரவில் புதுப்பிக்கப்பட்டது.

இதனால் ஏற்படும் விநியோக செலவை குறைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கியூ. ஆர். பங்கீடு மூலம் வாரத்துக்கு பெறப்படும் எரிபொருளின் அளவுகளில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



## இன்றைய ராசிபலன்

மார்ச் - 09 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 25
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவிதியை

**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். பழையகடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் பிரச்சினை தீரும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. ன்மை நடக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரை குறையாக நின்ற வேலைகள் முடியும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப்போவது ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். வியாபாரத்தில் வேலை யாட்களால் பிரச்னை வரக்கூடும். தடைகளைதாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றைவிட்டுக் கொடுப்பீர்கள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் நெளிவுகளைகற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைகூடும். புதியபாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. புது சலுகைகள் கிடைக்கும்.

# கோவை கார் வெடிப்பு சம்பவம் ஐ. எஸ். அமைப்பு பொறுப்பேற்பு!

கோவை, மார்ச் 09

கோவையில் காரில் சிலிண்டர் வெடிப்பு சம்பவத்துக்கு ஐ. எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அத்துடன், கோவையில் ஐ. எஸ். ஆதரவாளர்கள் 200 பேரின் நடவடிக்கைகளை பொலிஸார் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர்.

கோவை உக்கடம் அருகேயுள்ள கோட்டை ஈஸ்வரன் கோயில் வீதியில் உள்ள சங்கமேஸ்வரர் கோயில் முன்பு, கடந்த ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி காரில் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் நடந்தது.

இதில், காரை ஓட்டி வந்த அதே பகுதியைச் சேர்ந்த ஜமேஷா முபின் என்பவர் உயிரிழந்தார். உயிரிழந்த முபினின் வீட்டிலிருந்து வெடிகுண்டு தயாரிப்பதற்கான இரசாயனங்கள், ஐ. எஸ். தீவிரவாத அமைப்பு ஆதரவு வாசகங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த வழக்கு தொடர்பாக மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) அமைப்பினர், இந்தக் கார் வெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வெடிப்பு சம்பவம் தீவிரவாத சதிச்செயல் என விசாரணையில் தெரியவந்தது. ஆனால், எந்த தீவிரவாத அமைப்பும் இச்சம்பவத்துக்கு பொறுப்பு ஏற்கவில்லை.

இந்நிலையில், கர்நாடக மாநிலம் மங்களூரில் முச்சக்கர வண்டி ஒன்றில் குக்கர் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. இச்சம்பவம் தொடர்பாகவும் என். ஐ. ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே, ஐ. எஸ். தீவிரவாத அமைப்பின் ஆதரவான வொய்ஸ் ஒவ் கொரசான் பத்திரிகை, 'டார்க் வெப்சைட்' வழித்தடத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் இடம் பெற்றுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பான விவரங்களை என். ஐ. ஏ. தெரியப்படுத்தியுள்ள கோவை மாநகர பொலிஸார் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியோடு அறிக்கை வெளியிடப்பட்ட பின்புலத்தையும் ஆய்வு செய்து வருகின்றனர். கோவை கார் வெடிப்பு, மங்களூர் குண்டு வெடிப்பு சம்பவங்களை ஐ. எஸ். அமைப்பு பொறுப்பேற்பதாகவும், எங்கள் அமைப்பின் ஆதரவரவாளர்கள் தென்னிந்திய மாநிலங்களில் உள்ளனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து கோவையில் ஐ. எஸ். தீவிரவாத அமைப்பின் ஆதரவு எண்ண ஓட்டத்தில் உள்ள நபர்களை கண்டறிந்து, அவர்களின் நடவடிக்கையை பொலிஸார் கண்காணித்து வருகின்றனர். இந்தப் பட்டியலில் 200 பேர் உள்ளனர். இதில், 20 பேர் அதிதீவிர ஆதவாளர்கள். இவர்கள் அனைவரையும் பொலிஸார் மிகத் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# ஜெயலலிதா எடுக்கும் முடிவுபோல என்னுடைய முடிவுகளும் இருக்கும்

## பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை



சென்னை, மார்ச் 09

ஜெயலலிதா எப்படி முடிவு எடுத்தாரோ அதேபோல்தான் என் முடிவுகளும் இருக்கும் என்று பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தார்.

தற்போது திராவிட கட்சிகள் வளர பா. ஜ. கவின் ஆட்கள் தேவைப்படுகின்றனர். பா. ஜ. கவின் வளர்ச்சி திராவிடக் கட்சிகளின் கண்களை உறுத்துகிறது. இதனால் பா. ஜ. க. தலைவர்களை திராவிட கட்சிகள் விரும்புகின்றன.

தேசிய கட்சிகளின் தலைவர்கள் மேலாளர்கள்போல் இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். அப்படி என்னால் இருக்க முடியாது. திராவிட கட்சிகளில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அசைக்க முடியாத தலைவர்களாக இருப்பார்கள்.

என்னுடைய நடவடிக்கை அதிர்ச்சி அளிக்கத்தான் செய்யும். ஜெயலலிதா எடுக்காத முடிவுகளா? கருணாநிதி எடுக்காத முடிவுகளா? தமிழ்நாடு பார்க்காத ஆளுமையா? அந்த மாதிரித்தான் நான் இருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

தலைவராக இருப்பவர் தலைவராகத்தான் முடிவுகள் எடுப்பார். ஜெயலலிதா எப்படி முடிவு எடுத்தாரோ அதேபோல்தான் நான் எடுக்கும் முடிவுகளும் இருக்கும். தலைவன் தலைவனுக்கு தகுந்த மாதிரிதான் முடிவு எடுப்பார். இதில் பாரபட்சம் இருக்காது.

பயம், பாரபட்சம், பின்னால் போய் கை, கால்களில் விழுந்து கெஞ்சும் பழக்கம் கிடையாது. ஜெயலலிதா மீது இதே குற்றச்சாட்டை வைத்திருக்கலாமே. கட்சியிலிருந்து நிறைய முன்னாள் அமைச்சர்கள் வெளியே போய் தி. மு. கவில் சேர்ந்தபோது. அதேபோல் கருணாநிதியிடமிருந்து வெளியே வரவில்லையா? எனெனில், அவர்கள் தலைவர்கள்.

தலைவர்கள் முடிவு எடுத்தால் 4 பேர் கோபித்துக் கொண்டு வெளியே வரத்தான் செய்வார்கள். நானும் அந்த மாதிரி தலைவர்தான் தலைவர் என்ற முறையில் பயம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பேன். ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை இருக்கும். அரசியல் கட்சி அப்படித்தான் வளர முடியும் - என்றார். (ஐ)

# ஜெயலலிதாவுடன் தன்னை அண்ணாமலை ஒப்பிடக்கூடாது

சென்னை, மார்ச் 09

அண்ணாமலை தன்னை ஜெயலலிதாவுடன் ஒப்பிடக்கூடாது. அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடரும் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை நேற்று சந்தித்தார்.

அப்போது, , "கல் வீசி னால் உடைய அ. தி. மு. க. கண்ணாடி இல்லை. அதிமுக என்பது கடல். கடலில் கல் வீசினால் கல் தான் காணாமல் போகும்.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ. தி. மு. க. எழுச்சியுடன் உள்ள காரணத்தால், விருப்பப்பட்டு எமது கட்சியில் இணைகின்றனர். இதை ஏற்றுக் கொள்கிற பக்குவம் அரசியல் கட்சி தலைவருக்கு இருக்க வேண்டும்.

அண்ணாமலைக்கும் இருக்க வேண்டும். அ. தி. மு. க அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டு இருப்பதால், அனைவரும் வந்து இணைகின்றனர். இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்கக் கூடாது.

பழனிசாமி உருவப்ப டத்தை பா. ஜ. கவினர் எரிப்பது போன்ற நிகழ்வுகளை அக்கட்சியின் தலைவர் கட் டுப்படுத்த வேண்டும். அ. தி. மு. க. ஒன்றரை கோடி தொண் டர்களை கொண்டுள்ளது. அவர்கள் கிளர்ந்து எழுந்தால் என்னவாகும்.

"அண்ணாமலை எப்படி தலைவர் ஆனார் என்பதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால், நான் ஜெயலலிதா போன்ற தலைவர் என்று சொல்லக்கூடாது. ஜெயலலிதா மாதிரி ஒரு தலைவர் இனி பிறக்கப்போவது இல்லை" என்றார். (ஐ)

# வெளியேறியவர்கள் மீண்டும் தாய் வீட்டுக்குத் திரும்புங்கள்!

## அழைப்பு விடுக்கிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, மார்ச் 09

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க.**

அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே, பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்புகளுக்கும் அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்படுவார் என தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே, துமிந்த திஸாநாயக்க இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டவர்தான் துமிந்த திஸாநாயக்க. எனினும், தயாசிறி உள்ளிட்ட தரப்புடன் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக அவர் பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பேரீச்சம்பழத்திற்கு வரி குறைப்பு!

கொழும்பு, மார்ச் 09

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழத்துக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டங்கள் வரியைக் குறைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ரமழான் பண்டிகை காலத்திற்கான நிவாரண நடவடிக்கையாக ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதன்படி, 01 கிலோ பேரீச்சம்பழத்திற்கு 200 ரூபா வீதம் விதிக்கப்பட்டிருந்த வரி , 01 கிலோவுக்கு 01 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி செலவிடப்படாத வகையில், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பரிந்துரையின் பேரில் பல வேறு நாடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து அன்பளிப்புகள் அல்லது நன்கொடைகள் மூலம் பெறப்படும் பேரீச்சம்பழத்திற்கு மட்டுமே இந்த வரி விலக்கு பொருந்தும்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்க 2308/17 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஜனாதிபதியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுதந்திரமாக ஊருக்கு செல்ல முடிகின்றது!

## மொட்டு கட்சி எம்.பி. பெருமிதம்

கொழும்பு, மார்ச் 09



"சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது கிராமங்களுக்கு செல்ல முடிகின்றது. குட்டி தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம்." - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரிசை யுகத்தால் எமக்கு கிராமங்களுக்கு செல்ல முடியாதிருந்தது. தற்போது வரிசை யுகம் இல்லை. உரப்பிரச்சினை இல்லை. சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கவுள்ளது. எனவே, நாடு நெருக்கடியில் இருந்து மீளும். இதனை விரும்பாத சிலரே அரசின் திட்டத்தை சீர்குலைக்க முற்படுகின்றனர்.

தேர்தல் நடந்தால் அதில் நிச்சயம் வெற்றிபெறுவோம்- என்றார். (அ)

# கால்நடை தீவனத்தில் மோசடி!

கொழும்பு, மார்ச் 09

வெளிநாடு ஒன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4,920 கிலோகிராம் கால்நடைத் தீவனத்தை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 07 கொள்கலன்களில் கால்நடைத் தீவனம் கொண்டு செல்லப்பட்டது.

அங்கு, ஒரு கொள்கலனில் இருந்து 1,476,000 ரூபா பெறுமதியான 4,920 கிலோகிராம் கால்நடை தீவனத்தை மோசடியான முறையில் பெற்றுக் கொண்டமை தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவர் என தெரியவருகிறது. (அ)

# பீரிஸ் குறித்து உரிய நடவடிக்கை அறிவித்தது பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 09

"பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் விவகாரம் தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து ஜி.எல். பீரிஸை நீக்குவதற்கு கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

எனினும், இது பற்றி தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும், கடிதம்கூட இன்னும் அனுப்பப்படவில்லை, முடிந்தால் கடிதம் அனுப்பட்டும், அதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் ஜி.எல். பீரிஸ் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அறிவித்தார்.

இது தொடர்பில் மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று



முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கேள்வி எழுப்பட்டது. இதற்கு பதிலளித்த செயலாளர் சாகர காரியவசம்,

"எமது கட்சி நன்றி மறவாத கட்சியாகும். ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றும் கட்சியாகும். எனவே, தான் மொட்டு கட்சி தவிசாளரா என்பது பற்றி பீரிஸ் தனது மனசாட்சியிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். எது எப்படி இருந்தாலும் இது விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய தவிசாளராக பொருத்தமான நபரொருவர் தெரிவு செய்யப்படுவார்." -என்றார். (அ)

# இதுவரை ஒரு முட்டை கூட நாட்டுக்கு வரவேயில்லை!

கொழும்பு, மார்ச் 09

இன்று வரை ஒரு முட்டை கூட நாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முட்டை இறக்குமதிக்காக உலகின் அதியுயர் தரச் சான்றிதழை இலங்கை கோரியுள்ளதாகவும், அந்த சான்றிதழின் பிரகாரம் இந்தியாவில் உள்ள நிறுவனம் ஒன்று முட்டைகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சோதனையிட முதலில் இராணுவத்தினருக்கு உணவளிக்கப்பட்டதாக உண்மைக்கு புறம்பான செய்தியொன்று தற்போது பரப்பப்பட்டு வருகிறது. அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்குவோம் - என்றார். (அ)

# சலுகை வழிமுறைகளை அறிவித்த மத்திய வங்கி

கொழும்பு, மார்ச் 09

தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகை வழிமுறைகளை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்காக நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலங்கள், சலுகை வட்டி வீதங்கள், தொழில்படு மூலதனக் கடன்கள், படுகடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல், மீள அட்டவணைப்படுத்தல் போன்றவற்றை இந்தத் திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

இந்தச் சலுகைகள், சுற்றுலாத்துறை, ஆடை, பெருந்தோட்டம், தகவல் தொழில்நுட்பம், ஏற்பாட்டுச்சேவை வழங்குநர்கள், போக்குவரத்து, பாடசாலை வேன் சேவை வழங்குநர்கள், பார ஊர்திகள், சிறிய பொருள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பேருந்துகள் அத்துடன் தனியார் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட துறைகளின் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு பெருமளவில் உதவியளிப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ரூபா தொடர்ந்தும் வலுவான நிலையில்!

கொழும்பு, மார்ச் 09

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக இன்று வலுவான நிலையில் உள்ளது.

அதன்படி, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இன்றைய நாணய மாற்று விகிதங்களுக்கமைய, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 313 ரூபா 77 சதமாக பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி நேற்று முன்தினம் 318 ரூபா 30 சதமாக பதிவாகியிருந்தது.

இதேவேளை, அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 331 ரூபா 05 ரூபாவாக நேற்று பதிவாகியுள்ளது. இது நேற்று முன்தினம் 335 ரூபா 75 சதமாக இருந்தது. (அ)

# சிறையிலிருந்து தப்பிச்செல்ல முற்பட்ட கைதி சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 09

கேகாலை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த கைதி சிறைச்சாலையின் பணிகளில் அதிகாலை ஈடுபட்டிருந்தவேளையில் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த கைதி குருநாகல் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.




## திருவள்ளுவர் நாள், மகளிர் தினம் கலாசாலையில் ஒருசேர அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 09

திருவள்ளுவர் நாள் மற்றும் உலக மகளிர்நாள் என்பன கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்றுக் காலை ஒருசேர அனுஷ்டிக்கப்பட்டன.

கலாசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலா சாலையில் அமைந்துள்ள திருவள்ளு வர் திருவுருவச்சிலைக்கு மாசி உத்தர நாளில் இடம்பெறும் திருவள்ளுவர் குருபூசையை அனுஷ்டிக்கும் வகையில் மலர் வழிபாடு மேற் கொள்ளப்பட்டது. கலாசாலை அதி பர், அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், மற்றும் விரிவுரை யாளர்கள் ஆசிரிய மாண வர்கள் என அனைவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற அரங்க நிகழ்வுகளில் பிள்ளைகளை மையப்படுத்திய கல்வியும் பெண்களும் என்ற பொரு ளில் கலாசாலை விரிவுரை யாளர் பிரபாலினி தனமும் வள்ளு வம் தந்த வள்ளுவர் என்ற பொருளில் தமிழ் சிறப்பு நெறி ஆசிரிய மாணவி எம்.ஏ. சமீனாவும் வள்ளு வரும் பெண்மையும் என்ற பொருளில் இரா. செல்வவடிவேலும் உரை யாற்றினர்.



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்துக் குறட்பாக்கள் பாடப்படு கின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக் கதாகும். (அ)

## சீனாவின் உறுதிக் கடிதம் இந்திய ஊடகம் விமர்சனம்

கொழும்பு, மார்ச் 09

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் அரச வங்கி புதிய உறுதிக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக வெளியான தகவல் குறித்து இந்திய ஊடகம் ஒன்று தகவல்களை வெளியிட்டுள்ளது.

பண நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு சீனா இரண்டு வருட கடன் தடையை வழங்குகிறது என்ற தலைப்பில் இந்த செய்தியை த ஹிந்துஸ்தான் ரைம்ஸ் வெளியிட்டுள்ளது.

முன்னதாக 10 வருட கடன் தடைக்காலம் மற்றும் 15 வருடங்கள் கடன் மறுசீரமைப்பை உள்ளடக்கிய கடன் நிலைத்தன்மை நிதி வசதியை இந்தியா வழங்கியிருந்தது.

எனினும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 99 வருட குத்தகைக்கு அனுமதியளித்த இலங்கைக்கு பீஜிங், இரண்டு வருட கடன் தடையை மட்டுமே வழங்கியுள்ளது.

பாரிஸ் கிளப்பும் இந்தியாவும் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் அடிப்படையில் இலங்கைக்கு நிபந்தனையற்ற மற்றும் வெளிப்படையான ஆதரவை வழங்கியிருந் தாலும், தமது நெருங்கிய கூட்டாளியான இலங்கைக்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக் காக, இரண்டு வருட கடன் தடையை சீனா வழங்கியுள்ளதாக த ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தெரி வித்துள்ளது. (அ)

## பனிப்புலத்தில் வாள்வெட்டு; நால்வர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 09

இளவாலை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப் பன் கோவில் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி குறித்த பகுதியில் நபர் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், அவரது காரும் சேதப்படுத் தப்பட்டது.

இதனையடுத்து, சம்பவத்து டன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றதாக கூறப்பட்ட நிலையில் அவர் களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸா ரால் முன்னெடுக்கப்பட்டு வந் தன.

இந்த நிலையில், குறித்த சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## செவித்திறனற்றோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

கொழும்பு, மார்ச் 09

செவிப்புலனற்றவர்களுக்குச் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம் இந்த வாரத்திலிருந்து ஆரம்பிக் கப்படும் என போக்குவ ரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இதனை குறிப் பிட்டார்.

செவிப்புலன் அற்ற 50 பேரை உள்ளடக்கிய ஆய்வில் சாதகமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை



யினால் இந்த வாரத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

இதன் அடிப்படையில் நாட ளாவிய ரீதியில் சாரதி அனும திப்பத்திரங்களை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின் உறுதிமொழிகளை வரவேற்கிறது ஐ.நா. முக்கிய குழு!

ஜெனிவா, மார்ச் 09

**ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் இலங்கை தொடர்பான முக்கிய குழு தமது அறிக்கையை முன்வைத்துள்ளது.**

**பிரித்தானியாவை தலைமையாகக் கொண்ட இந்தக் குழுவில் கனடா, மலாவி, மொன்ரி நீக்ரோ, வடக்கு மாசிடோனியா மற்றும் அமெரிக்கா ஆகியன உள்ளடங்கியுள்ளன.**

இந்த அறிக்கையின்படி, இலங்கையில் மனித உரிமை களைப் பாதுகாப்பது தொடர் பான சமீபத்திய உறுதிமொழி களை தாம் வரவேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அமைதியான போராட்டங்களுக்கு கடுமை யான பதில்கள் குறித்த தமது அதிருப்தியில் மாற்றமில்லை எனவும் முக்கிய குழு குறிப் பிட்டுள்ளது.

அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் ஒன்றுபடு வதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைகளை இலங்கை பாதுகாக்க வேண்டும்.

போராட்டம் தொடர்பான எந்த வன்முறைக்கும் பொறுப் புக் கூற வேண்டும்.

மனித உரிமைகளின் பாதுகாப்பை ஊக்குவிப்பதில் குடியியல் சமூகம் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது, மேலும் எந்தவொரு எதிர்கால சட்டத்தின் மூலமாகவும் குடி யியல் சமூகத்தின் முக்கியமான பணிக்கான இடத்தைப் பாது காப்பதன் முக்கியத்துவத்தை தாம் வலியுறுத்துவதாக இலங்கை தொடர்பான முக்கிய குழு தெரிவித்துள்ளது.

சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துதல் மற்றும் பிரதிநிதித் துவ ஜனநாயகத்தைப் பாது காப்பதன் முக்கியத்துவம் உண ரப்படவேண்டும்.

இதில் நிறுவனங்கள் மற்றும் நிர்வாக அமைப்புகளின் சுதந்தி ரத்தை உறுதிப்படுத்துவது உட்பட இலங்கையர்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு முக்கியமாக தேர்தல் முறைமை யும் அடங்கும் என்றும் முக்கிய குழு குறிப்பிட்டுள்ளது.

நீண்ட காலமாக இருந்து வரும் தண்டனையில் இருந்து தப்பித்துக்கொள்ளல் மற்றும் ஊழலுக்கு தீர்வு காணுமாறு இலங்கை அதிகாரிகளை தாம் வலியுறுத்துவதாகவும் அந்த குழு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் செப்ரெம்பர் மாதம் சபைக்கு வழங்கிய உறுதிமொழிகளைக் குறிப்பிட்டுள்ள, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர் பான முக்கிய குழு, அனைத்து சமூகங்களுக்கும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்ற இலக்குடன், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத் துதல் உள்ளிட்ட நிலைமாறு கால நீதியின் முக்கியத்துவத்தை தாம் வலியுறுத்துவதாக தெரி வித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட் டத்திற்குப் பதிலாக இலங்கை யின் சர்வதேசக் கடப்பாடுகளு டன் ஒத்துப்போகும் சட்டத்தை கொண்டு வருவதன் முக்கியத்து வத்தையும் அந்த குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம் ஆணையாளர் மற்றும் அவரது அலுவலகத்து டன் இணைந்து பணியாற்று மாறு முக்கிய குழு இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

## நாட்டின் பொருளாதார நெருக்கடி தற்கொலைக்கு வழிவகுத்துள்ளது

கொழும்பு, மார்ச் 09

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பலரை தூக்கிட்டு தற் கொலைக்கு கொண்டு சென் றுள்ளதாக ஆய்வு ஒன்றில் தக வல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், அதிக வாழ்க் கைச் செலவை எதிர்கொள்வது முதல் குழந்தைகளுக்குக் குறை வாக உணவளிப்பது வரை, இந்த நெருக்கடியானது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீது அதிக பாதிப்பை ஏற்படுத்தியதால், நாடு முழுவதிலும் உள்ள அனைத்து குடும்பங்களையும் பாதித்துள்ளதாக அந்த ஆய் வில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய இளைஞர்களும் தங்களின் செலவுகளைச் சமா ளிக்கப் பொருத்தமான வேலை வாய்ப்பைத் தேடிக்கொண்டி ருக்கிறார்கள்.

நாட்டை விட்டு வெளியே றப் பலர் ஆவலுடன் காத்திருக் கும்போது, தங்களுக்கும் தங் கள் குடும்பங்களுக்கும் உண வளிக்க நாட்டிலேயே தங்க விரும்புபவர்களும் உள்ளனர்.

இந்த நிலையில், பணத்தை உழைப்பதற்காக, சில குடும்ப ங் கள் பயன்படுத்தும் சமீபத்திய உயிர்வாழும் முறை பாலியல் தொழிலாகவும் மாற்றம் பெற் றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிகமான பெண்கள் இந்த தொழிலில் ஈடுபடும் அதே வேளையில், 20 முதல் 40 வய துக்குட்பட்ட இளைஞர்களும் வாழ்வாதாரத்திற்காக இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்ற தகவலையும் ஆங்கில ஊடகமொன்று ஒன்று வெளி யிட்டுள்ளது.

இலங்கையின் பொருளா தார நெருக்கடி மோசமடைந்து கடந்த சில மாதங்களுக்குள், அதிகமான ஆண்கள் 'ஆண் பாதுகாப்பு' சேவைகளை வழங்கும் இணையத்தளங்களில் பதிவு செய்துள்ளனர்.

பல்வேறு நாடுகளில் இருந்து பாலியல் நோக்கங்களுக்காக, ஆண்களை வழங்குவதற்காக வெளிநாடுகளில் இருந்து இந்த இணையத்தளங்கள் செயல்படு வதாகவும், ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# நல்லிணக்க அலுவலகம் குறித்த சட்டம் ஒரு வருடத்துக்குள் நிறைவேற்றப்படும்

## ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் அறிவித்தது இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 09

உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ள நிலையில், பெரும்பாலும் ஒரு வருட காலத்திற்குள் அச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அதன்படி பாதிக்கப்பட்ட தரப்பினரின் குடும்பங்கள் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வெகு விரைவில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் அறிவித்துள்ளது.

இலங்கை மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு என்பன தொடர்பில் கடந்த திங்கட்கிழமை நிகழ்நிலை முறைமையில் நடைபெற்ற மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் அமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் நீதியரசர் ரோஹிணி மாரசிங்க வாய்மொழி மூலம் விளக்கமளித்தார்.

அது மாத்திரமன்றி இது குறித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எழுத்துமூல அறிக்கையும் மீளாய்வுக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

நாட்டு மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தினால் பல்வேறு நேர்மறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில், "இரு தரப்பினரும் மீறல்களில் ஈடுபட்ட அதேவேளை, இது முன்நோக்கிப் பயணிப்பதற்கான தருணம்" என்ற கோணத்தில் நிலைமாறுகாலநீதியை உறுதிப்படுத்துவதற்கான பல்வேறு உள்ளகப் பொறிமுறைகளை அரசாங்கம் ஸ்தாபித்தது.

இந்தப் பொறிமுறைகள் ஆயுதப் போராட்டத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதுடன், அவை மீளநிகழா திருப்பதை உறுதிப்படுத்தின.

அதன் ஓரங்கமாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம், மரணங்களைப் பதிவு செய்தல், காணாமல்போனமைக்கான சான்றிதழ் வழங்கல், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான சட்டம், குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் என்பன அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டன.

மேலும் தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளது.

அதன்படி பாதிக்கப்பட்ட தரப்பினரின் குடும்பங்கள் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வெகுவிரைவில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும். அதுமாத்திரமன்றி பெரும்பாலும் ஒரு வருடத்திற்குள் உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் தொடர்பான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

அடுத்ததாக நினைவு கூர்தல் என்பது நல்லிணக்க செயன்முறையின் இன்றியமையாததோர் அங்கமாகும். அதற்கான வாய்ப்பை மறுப்பதென்பது இனங்களுக்கு இடையிலான பிளவை மேலும் ஆழப்படுத்துவதற்கும், நல்லிணக்க செயன்முறையில் தடங்கல்களை ஏற்படுத்துவதற்குமே வழிவகுக்கும்.

அதன்படி இராணுவத்தினரின் குடும்பங்களைப்போன்று பாதிக்கப்பட்ட தரப்பினரின் குடும்பங்களும் சமத்துவமான முறையில் நடத்தப்படவேண்டும் என்றும், தமது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் நாம் பரிந்துரைத்துள்ளோம். அதற்கமைய இப்போது பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் தமது உறவுகளை நினைவுகூருவதற்கான வாய்ப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை நாட்டு மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன வென்பது குறித்தும் அவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. (அ)



# பெண் விமானிகளுடன் மட்டும் பறந்த விமானம்

கொழும்பு, மார்ச் 09

பெண் விமானிகள் மற்றும் பெண்களை மட்டுமே கொண்ட விமானக் குழு உறுப்பினர்களுடன் இந்தியாவின் திருச்சிக்கு, சிறிலங்கன் எயார்லைன்ஸ், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து விமானமொன்றை அனுப்பியது.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில், சிறிலங்கன் எயார்லைன்ஸ், நேற்றுக் காலை இவ்வாறு விமானமொன்றை அனுப்பி வைத்தது.

ஏ-320 எயார்பஸ் ரக விமானம் அனுப்பப்பட்டதுடன், கப்டன் சாமிக்க ரூபசிங்க பிரதான விமானியாகவும், பிமாலி ஜீவந்தர துணை விமானியாக இருந்தனர்.

இது தவிர, விமானப் பணியாளர்கள் என 05 பெண் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அவர்களில் விமான நடவடிக்கைகளின் பிரதானி ரோஷனி திஸாநாயக்க, கபின் மேற்பார்வையாளர் உபுலி வர்ணகுல, விமானப் பணிப்பெண் லக்மினி திஸாநாயக்க, ஜெயகலனி கின்சன் மற்றும் ஹர்ஷி வல்பொல ஆகியோர் அடங்குவர்.

நேற்று காலை 08.10 மணியளவில் சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானமான யு.எல்-131 இல் இந்தியாவின் திருச்சிக்கு 67 பயணிகளுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

(அ)

# ஐவருக்கு மரண தண்டனை

கொழும்பு, மார்ச் 09

கேகாலை மாகாண மேல் நீதிமன்றத்தில் நேற்று ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 03.07.2014 அன்று கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெவலகம, கஹகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்தின்போது சிமெந்து கல்லினால் தாக்கி நபர் ஒருவரைக் கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட ஐவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதனையடுத்தே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கேகாலை மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜயகிடி அல்விஸ் இதற்கான உத்தரவை பிறப்பித்தார். (அ)

# வடக்கில் மாவட்டங்களுக்கு இடையே கால்நடைகள் கொண்டு செல்ல தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 09

வட மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையே கால்நடைகளை கொண்டு செல்வதற்கான சுகாதார அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் சில பகுதிகளில் கால்நடைகளிடையே பரவும் வைரஸ் தொற்று காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல குறிப்பிட்டார்.

அம்மை நோய் தொற்றுக்குள்ளான சுமார் 25 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக கூறிய அவர், கால்நடைகள் இடையே இந்த தொற்று தொடர்ச்சியாக நீடிக்காது என அவர் கூறினார்.

அம்மை நோய் தொற்றுக்குள்ளான கால்நடைகளை தனியாக பராமரிப்பதனூடாக தொற்று பரவும் வீதத்தை குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட கால்நடை வைத்தியர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல கூறினார்.

வட மாகாணத்தில் நோய் தொற்றுக்குள்ளான கால்நடைகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இலங்கை பெண்கள் மீது சைபர் துன்புறுத்தல்கள்!

## பெண் எம்.பிக்கள் குழு கவலை

கொழும்பு, மார்ச் 09

இலங்கையில் பெண்களுக்கு எதிரான சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பது குறித்து கரிசனை வெளியாகியுள்ளது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பெண்களுக்கு எதிரான சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

டிஜிற்றல் தளங்களில் பாலின வன்முறைகளை கையாள்வதற்கு பயனுள்ள மற்றும் திறமையான புகார் பொறிமுறைகள் அவசியம் என தெரிவித்துள்ள பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, டிஜிற்றலை மையமாக கொண்ட பாலின வன்முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்துள்ளது.

டிஜிற்றல் தளங்களை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது என பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் எனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உலகமயமாக்கல் காரணமாக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மாற்றமடைந்துள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

சர்வதேச பெருந்தொற்று மற்றும் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக உலகில் வாழ்க்கை பாரிய விதத்தில் மாற்றமடைந்தது. தொழில்கள் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகள் மாற்றமடைந்தன எனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில்கள் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகள் ஒன்லைன் டிஜிற்றல் உலகிற்கு மாற்றப்பட்டுள்ளன. பெருந்தொற்றிற்கு பின்னைய பல சமூகங்களில் இணைய வழிக் கல்வி மற்றும் வீட்டிலிருந்து பணி புரிதல் என்பது இலங்கை உட்பட பல நாடுகளில் சாதாரணமான விடயங்களாக மாறியுள்ளன என தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, இதன் காரணமாக டிஜிற்றல் வெளியை மற்றும் சாதனங்களை பயன்படுத்துவது பல மடங்காக அதிகரித்துள்ளது. குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் இது பல மடங்கு அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் குடும்பத்தினால் ஒரு டிஜிற்றல் சாதனத்தை மாத்திரம் கொள்வனவு செய்யக்கூடிய அல்லது வைத்திருக்க கூடிய நிலை காணப்பட்டால் பெண்பிள்ளையை விட ஆண் பிள்ளைக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என தெரிவித்துள்ள இலங்கையின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, பாரபட்ச நம்பிக்கைகளே இதற்கு காரணம் எனவும் தெரிவித்துள்ளது.(அ)

# அதானி, நரேந்திர மோடியை லண்டனில் தாக்கிப் பேசிய ராகுல்





இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் பிரதமர் நரேந்திர மோதியை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் ஒருமுறை தாக்கிப் பேசியுள்ளார். இந்த முறை லண்டனில்.

லண்டனில் நடைபெற்ற இந்திய பத்திரிகையாளர்கள் சங்க நிகழ்ச்சியில், பாரத் ஜோடோ யாத்திரை, சீனா மற்றும் ரஷ்யா மீதான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, பிபிசி ஆவணப்படத்திற்குத் தடை மற்றும் வரவிருக்கும் பொதுத் தேர்தல்கள் தொடர்பான கேள்விகளுக்கு ராகுல் காந்தி பதிலளித்தார்.

'அரசியல் மற்றும் மக்கள்: ஏற்பிலிருந்து அரங்கேற்றம் வரை" என்ற நிகழ்ச்சியில், ராகுல் காந்தி ஊடகங்களுடன் உரையாடினார். இந்த நிகழ்ச்சியின் நெறியாளராக இந்திய பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் டேனிஷ் கான் பங்கெடுத்தார்.

பார்வையாளர்களில் பெரும்பாலும் இந்தியா மற்றும் பிரிட்டனை சேர்ந்த பத்திரிகையாளர்கள் இருந்தனர்.

ஒரு நாள் முன்னதாக, அதாவது மார்ச் 3ஆம் திகதியும், இங்கிலாந்தின் புகழ் பெற்ற கல்வி நிறுவனமுமான கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ராகுல் காந்தி விரிவுரை நிகழ்த்தினார். அதிலும் இந்தியாவில் ஜனநாயகம் தாக்கப்படுவதாகவும் அது ஆபத்தில் இருப்பதாகவும் ராகுல் காந்தி குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு நரேந்திர மோதியின் ஆளும் பாஜக அரசுதான் காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ராகுல் காந்திக்கு பதிலடி கொடுத்த பாஜக செய்தித் தொடர்பாளர் ஷெஹ்ஸாத் பூனவல்லா, ராகுல் காந்தியின் பாட்டி இந்திரா காந்தி எமர்ஜென்சியை விதித்ததாகவும் அவர், ஜனநாயகத்தைப் போதிக்கிறார் என்றும் கிண்டல் செய்தார்.

அதே நேரத்தில், புல்வாமா தாக்குதல் பாகிஸ்தானால் நடத்தப்பட்டது என்று ராகுல் காந்தி கூறவில்லை என்று மற்ற பாஜக தலைவர்கள் குற்றம் சாட்டினர்.

**இந்தியாவில் ஊடகங்களுக்கு எதிரான ஒடுக்குமுறை**

'இந்தியாவில் எங்கும் குரல் நசுக்கப்படுகிறது. இதற்கு உதாரணம் பிபிசி ஆவணப்படம்" என்று ராகுல் காந்தி கூறினார். அரசுக்கு எதிராக பிபிசி செய்தி வெளியிடுவதை நிறுத்தினால், அதன் மீதான வழக்குகள் மறைந்துவிடும் என்றார்.

இந்தியாவில் பிபிசி இந்த அடக்குமுறையைத் தற்போது அனுபவித்து வருவதாகவும் ஆனால் கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்தியாவில் ஊடகங்கள் ஒடுக்கப்பட்டு வருவதாகவும் ராகுல் காந்தி கூறினார்.

'செய்தியாளர்கள் மிரட்டப்படுகிறார்கள். தாக்கப்படுகிறார்கள், அரசு குறித்துச் சிறப்பித்துப் பேசும் செய்தியாளர்களுக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது" என்றார்.

**இந்தியாவின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் குற்றச்சாட்டு பற்றி?**

ராகுல் காந்தி வெளிநாடு சென்று இந்தியாவுக்கு அவப் பெயரை ஏற்படுத்த முயல்வதாக பாரதிய ஜனதா கட்சி நீண்ட நாட்களாகக் குற்றம்சாட்டி வருகிறது. இது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ராகுல் காந்தி, பிரதமர் நரேந்திர மோதி




வெளிநாட்டுப் பயணங் களின்போது ஆற்றிய உரைகளைக் குறிப்பிட்டார்.

'அந்த உரைகளில் பிரதமர் மோதி, 60 ஆண்டுகளில் இந்தியா எதையும் செய்யவில்லை என்றும் தனது அரசு வருவதற்கு முன்பு நாட்டில் ஊழல் தலைவிரித்து ஆடியதாகவும் பிரதமர் மோதி கூறினார். இவ்வாறு கூறியதன் மூலம், இந்தியாவை வலிமையாக்கப் பங்காற்றிய கடின உழைப்பாளிகள் அனைவரையும் பிரதமர் மோதி அவமதித்துள்ளார்.

'வெளிநாடுகளுக்குச் சென்று இந்தியாவை அவதூறு செய்பவர் இந்திய பிரதமர். எனது நாட்டை நான் ஒருபோதும் அவமதிக்கவில்லை, அவ்வாறு செய்யமாட்டேன்" என்று ராகுல் காந்தி தெளிவாகக் கூறினார்.

மேலும், தான் எதைச் சொன்னாலும் அதை பாஜக திரித்துக் கூறுகிறது என்றும் கூறினார்.

**'எதிர்க்கட்சிகளின் போராட்டம் கட்சிக்கு எதிரானதன்று, அமைப்புக்கு எதிரானது'**

இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, உறுதியாக இணைந்து செயல்படுகின்றன என்று ராகுல் காந்தி கூறினார். ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாஜகவுக்கு எதிராகப் போராடி அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்பது எதிர்க்கட்சிகளுக்குள் ஆழமாக வேரூன்றியுள்ளது.

எதிர்க்கட்சிகள் சில விஷயங்களில் பிளவுபட்டுள்ள போதிலும், அவர்கள் ஒன்றிணைந்து அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முயல்வதாக அவர் ஒப்புக்கொண்டார்.

இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் இனி எந்த அரசியல் கட்சியுடனும் போராடுவதில்லை, மாறாக நாங்கள் இந்தியாவின் நிறுவனக் கட்டமைப்பை எதிர்த்துப் போராடுகிறோம் என்று ராகுல் காந்தி கூறினார்.

இந்தியாவின் அனைத்து நிறுவனங்களையும் கைப்பற்றிய பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு எதிராக நாங்கள் போராடுகிறோம், இவர்களின் கைப்பற்றலால் சமமான களம் இல்லாமல் போய்விட்டது.

**அதானி பற்றிய குறிப்பு**

செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, அதானி குழுமம் பற்றிக் குறிப்பிடவும் மறக்கவில்லை. அதானி குழுமம் தொடர்பாக இந்தியாவில் ஆளும் நரேந்திர மோதி அரசுக்கு எதிராகப் பல கடுமையான குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்தார்.

கடந்த 3 ஆண்டுகளில் 609வது பெரிய பணக்காரராக இருந்து 2வது பெரிய

**பாஜக தலைவர்கள் பதிலடி**

பணக்காரர் என்ற பெருமையை கௌதம் அதானி பெற்றுள்ளதாகவும் பிரதமர் நரேந்திர மோதியுடன் அவருக்கு நல்ல உறவு இருப்பதாகவும் ராகுல் காந்தி கூறினார்.

காஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்ட 5 மில்லியன் டன் லித்தியம் இருப்பு மற்றும் அதன் ஏல அறிவிப்பு குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் அதானி குழுமத்தைச் சுட்டிக்காட்டினார். 'பங்கேற்கும் ஒவ்வொரு ஏலத்திலும் அதானி வெற்றி பெறுவார் என்று நான் உறுதியாக உங்களுக்குச் சொல்ல முடியும். வணிகத்தில் நுழைவதற்கு அவருக்கு அனுபவம் தேவையில்லை. அதனால் லித்தியம் தொழில் அதானி கைவசமாகும் என்று என்னால் கணிக்க முடியும்," என்றார்.

பிரிட்டன் பயணத்தின்போது ராகுல் காந்தி கூறிய கருத்துக்கு பாஜக செய்தி தொடர்பாளர் ஷெஹ்ஸாத் பூனாவாலா பதிலடி கொடுத்துள்ளார்.

ராணுவத்தையும், தியாகிகளையும் அவமதிப்பதே காங்கிரஸின் அடையாளம் என்றார் அவர். புல்வாமா தாக்குதலை முதலில் கார் வெடிகுண்டு என்று கூறி மூடி மறைத்தார் ராகுல் காந்தி. பின்னர் ராஜஸ்தானில் காங்கிரஸ் அரசு புல்வாமா தியாகிகளின் குடும்பங்கள் தங்கள் உரிமையைக் கோரியபோது அவர்களை அவமதித்தது என்று பூனாவாலா கூறினார்.

ராகுல் காந்தி குறித்துப் பேசிய மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், "ராகுல் காந்தி மீண்டும் அந்நிய மண்ணில் சென்று அழும் வேலையைச் செய்து வருகிறார். முடிவுகள் என்னவாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். மேலும் பெகாசஸ் பிரச்சினை அவரது மனதிலும் இதயத்திலும் குடிகொண்டுள்ளது," எனக் கூறினார். ●



# ஒரு சிப்பாய் கண்ட கனவு

**நிலாந்தன்**

புத்த பகவான் ராஜபோகங்களையும் குடும்பத்தையும் துறந்து சன்னியாசி ஆகியவர். ஆனால் அவர் இலங்கைத் தீவில் நிலாவரையில் ராணுவ முகாமில் உள்ள ஒரு சிப்பாயின் கனவில் தோன்றி தனது சிலையை நிலாவரையில் வைக்குமாறு கூறியதாக அந்த சிப்பாய் கடந்த கிழமை கூறியுள்ளார். ரவூப் ஹக்கீம் முன்பொருமுறை கூறியது போல நாட்டில் புத்தர் சிலைகள் எல்லைக் கற்களாக மாற்றப்பட்டு விட்டன.

அந்தச் சிப்பாய் நிலாவரையில் யாருக்காக நிலத்தை பாதுகாக்கின்றாரோ, அந்த மக்கள் மத்தியில் உள்ள மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு வெளியேற வேண்டாம் என்று நாட்டின் ஜனாதிபதி மன்றாடிக் கொண்டிருக்கிறார். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் குந்திக் கொண்டிருக்கிறார்?



இலங்கைத்தீவின் மொத்த படைத் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மிகச்சிறிய இலங்கைத் தீவு தனது அளவுப் பிரமாணத்திற்கு அதிகமாக படையினரைக் கொண்டிருக்கிறது. இப்படையில் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு கிழக்கை படை மயப்படுத்த நிறுத்தப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளிவிபரம் உண்டு. நாட்டின் பொதுத் துறை ஊதியத்தில் சுமார் 50 வீதம் படைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்- வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர் - கூறுகிறார். இலங்கைத்தீவின் பாதுகாப்புச் செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

சிறிய இலங்கைத் தீவு பாகிஸ்தானைப் போலவே தனது பருமனை விடப் பெரிய படைக்கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிலும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி. சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிய ஊடகங்களில் வந்த செய்திகளின்படி, அங்கு படையினருக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி குறைக்கப்பட்டதால், அங்கே படையினருக்குச் மூன்று வேளையும் சாப்பாடு போடக் காசில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் இலங்கைத்தீவில் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டஞ் செய்யும் பிக்குகளுக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது. நிலாவாரையில் கனவு கண்ட சிப்பாய்க்கும் மூன்று வேளை சாப்பாடு கிடைக்கிறது.

நாட்டின் பெருமளவு செல்வத்தையும் தலைப்பேறானவற்றையும் அனுபவிக்கும் படைக்கட்டமைப்பின் ஆட்தொகையைக் குறைத்தாலே போதும் நாட்டின் செல்வத்தில் பெரும் பகுதியை மிச்சப்படுத்தலாம். அவ்வாறு படைதரப்பில் ஆட்குறைப்பை செய்ய வேண்டும் என்பது ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளில் ஒன்று என்று முன்பு கூறப்பட்டது. ஆனால், அண்மையில் கண்டியில் உரையாற்றிய பொழுது ஜனாதிபதி ஐ.எம்.எஃப் விதித்த 15 நிபந்தனைகளை நிறைவேற்றியது பற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் அதில் படை ஆட்குறைப்பு தொடர்பாக எதுவும் பேசவில்லை. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியலில் படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்க முற்படுவது அரசியல் தற்கொலைக்கு நிகரானது என்பது ரணிலுக்கு தெரியும். அதனால் அவர் அதனை அடக்கி வாசிக்கின்றாரா, அல்லது 13-வது திருத்தத்தை எதிர்த்து வீதியில் இறங்கியதுபோல படை ஆட்குறைப்பைச் செய்தால் அதற்கும் எதிராகவும் பிக்குகளும் எதிர்க்கட்சிகளும் வீதியில் இறங்கலாம் என்ற ஒரு சாட்டைக்கூறி அந்த விவகாரத்தை ஒத்திவைத்து வருகிறாரா?

ஆனால் படையினரை ஆட்குறைக்காமல் தமிழ்ப் பகுதிகளை ராணுவ மயநீக்கம் செய்யமுடியாது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசாங்கத்தை பிணையெடுக்க முற்படும் ஐ.எம்.எஃப் போன்ற தரப்புகள் படை ஆட்குறைப்பை ஒரு நிபந்தனையாக முன் வைக்கவில்லையா? அதை ஒரு நிபந்தனையாக முன்வைக்கும்படி தமிழ்த்தரப்பு குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் மேற்கு நாடுகளை வற்புறுத்தவில்லையா? படையினரை ஆட்குறைக்காமல் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமா? படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்காமல் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளை நிறைவேற்றலாம் என்று அரசாங்கம் நம்புகின்றதா?



ஆனால் அரசாங்கம் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக மானியங்களை வெட்டி, உரத்தின் விலை, மின்கட்டணம், வங்கி வட்டி விகிதம் போன்றவற்றை உயர்த்தியதனால் அடிமட்ட மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னொரு புறம் அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் வரியினால் படித்த நடுத்தர வர்க்கம் அதாவது நாட்டில் அதிக வருமானத்தை பெறும் வகுப்பினர் பதட்டமடையத் தொடங்கியுள்ளார்கள்.

உரமானியத்தை வெட்டியதனால் உரத்தின் விலை கூடியது. அதனால் விவசாயிகள் நெல்லின் விலையைக் கூட்டினார்கள். நெல்லை வாங்கி விற்கும் வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையும் சேர்த்து மேலும் விலையைக் கூட்டினார்கள். அதாவது மானிய வெட்டு, வரி உயர்வு, வங்கி வட்டி அதிகரிப்பு போன்றவற்றின் சுமைகள் அனைத்தும் சாதாரண மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகின்றன. அதனால்தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.வி.பி ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருமெண்ணிக்கையான சிங்களமக்கள் பங்குபற்றினார்கள். அதுபோலவே கடந்த புதன்கிழமை 40க்கும் குறையாத தொழிற்சங்கங்கள் இணைந்து தமது எதிர்ப்பை காட்டின. இது ஒருபுறம். இன்னொருபுறம் அரசாங்கம் விதித்திருக்கும் புதிய வரியினால் நாட்டின் படித்த மேல் நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டுத் தப்பியோடத் தொடங்கியுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதாகவும் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன கூறியுள்ளார். நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும், ஆனால் இன்று 100 பேரே பணிபுரிவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய நிலைகூட ஏற்படலாம் என்றும், அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க பின்வருமாறு கூறியுள்ளார்.. "இந்த மாதத்தில் மாத்திரம் 50 முதல் 60 வரையிலான அரச வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பாக, சில வைத்தியர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இருப்பினும், நாட்டை விட்டு வெளியேறியுள்ள மருத்துவ நிபுணர்களின் பெயர் விபரங்களும் எண்ணிக்கையும் சுகாதார அமைச்சினால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவலுக்கு அமைவாக மொத்தமாக 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன".

"அதேவேளை, கிராமமட்ட மற்றும் நகர்ப்புற வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் வெளியேற்றத்தால் வைத்தியசாலை நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கொழும்பு தேசிய வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை போன்றன இதுவரை மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்படவில்லை. மேலும், அங்கு விசேட வைத்திய நிபுணர்கள் வைத்தியசாலையில் காணப்பட்ட போதிலும், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தொழில்நிமித்தம் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகளவிலான வைத்திய ஆலோசகர்களும் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனர்" என்று சமில் விஜேசிங்க கூறுகிறார்.

இவ்வாறு ஒருபுறம், மூளைசாலிகளும் படித்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம், அண்மையில், அமெரிக்க யுத்த விமானங்கள் படை அதிகாரிகளோடு நாட்டுக்குள் வந்து போயுள்ளன. திருகோணமலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து ஒரு கூட்டுத்தளத்தை உருவாக்கப் போவதாக "சிறிலங்கா கார்டியன்" எனப்படும் இணைய இதழ் கடந்த மாதம் 14ஆம் திகதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. ஏற்கனவே இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகரும் உளவுத்துறையின் தலைவரும் ரகசியமாக இலங்கைக்கு வந்து போனதாக செய்திகள் கிடைத்தன.

பிச்சையெடுத்த போதிலும் இச்சிறிய தீவு அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இப்பொழுதும் அதன் கவர்ச்சியை இழக்கவில்லை. அதனால்தான் பேரரசுகள் இச்சிறிய தீவைத் தேடிவருகின்றன. ஏற்கனவே சீனா அம்பாந்தோட்டையில் 99ஆண்டுகளுக்கு நிரந்தரமாக குந்திவிட்டது. கொழும்புத் துறைமுகத்தில் ஒரு பட்டினத்தை கட்டியெழுப்பிவிட்டது. சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா இலங்கையில் எங்கு தனது கால்களைப் பரப்பலாம் என்று தீவிரமாக உழைக்கின்றது. வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரப் பொருளாக மாறிவிட்டது. இச்சிறிய தீவு பேரரசுகள் பங்கிடும் அப்பமாக எப்பொழுதோ மாறிவிட்டது. ஒருபுறம் இச்சிறிய தீவைப் பேரரசுகள் தேடி வருகின்றன. இன்னொருபுறம் இச்சிறிய தீவின் படித்த மூளைசாலிகளோ நாட்டை விட்டுத் தப்பிச் செல்கிறார்கள். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் முகாமிட்டிருந்து கனவு காண்கிறார்?

# பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

**பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

**நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

பெண்களின் பங்களிப்புடனேயே எமது நாடு இன்று முன்னோக்கிப் பயணித்துக் கொண்டு இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று சர்வதேச பெண்கள் தினமாகும். நாட்டில் நூற்றுக்கு 52 சதவீதமான பெண்கள் வாழுகின்றனர்.

அதேபோன்று தொழில் நிறுவனங்களில் 27 இலட்சம் பெண்கள் தொழில்புரிகின்றனர்.

37 இலட்சம் பேர் வீட்டுப் பணிப்பெண்களாக பணி புரிகின்றனர்.

சுதந்திர வர்த்தக வலங்களில் பணியாற்றுபவர்களில் நூற்றுக்கு 85 சதவீதமானவர்கள் பெண்களாகவே உள்ளனர்.

தேயிலைத் தோட்டங்களில் பெண்களே அதிகளவான சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

மத்தியத்தர நாடுகளிலும் பெண்களே பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

உண்மையில் இன்று பெண்களின் பங்களிப்புடனேயே எமது நாடு இன்று முன்னோக்கிப் பயணித்துக்கொண்டு இருக்கின்றது.

அதேபோன்று நாட்டின் நெருக்கடிகளையும் பெண்களே எதிர்கொள்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் வீடுகளில் ஒரு கிளாஸ் தண்ணீரை மட்டும் அருந்திவிட்டு வயிரை நிரப்பிக்கொள்ளும் இலட்சக்கணக்கான பெண்கள் நாட்டி

பெண்களுக்கு உரிய கௌரவத்தை, உரிய இடத்தை பெற்றுக்கொடுப்பதற்கான போராட்டம் பல ஆண்டுகளாக தொடர்கின்றது.

உலகமானது மாறிக் கொண்டே செல்கின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் சமூகத்தில் பெண்களுக்க சம அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டியது அவசியம்.

பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் அமைச்சரவையில் அதிகளவான பெண்களை உள்வாங்கிக் கொண்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சராக ஐந்து ஒலிம்பிக் பதக்கங்கள் வென்றவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் பெண்ணாவார்.

கனடாவின் அமைச்சரவையிலும் அதிகளவான பெண்களே உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஸ்கன்டினேவிய நாடுகளிலுள்ள அமைச்சரவையிலும் பெண்களே அதிகளவில் உள்ளனர்.

இந்தியாவிலும் பெண்களின் பிரதிநிதித்துவதக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் எமது பாராளுமன்றத்தில் பெண் பிரதிநித்துவம் என்பது நூற்றுக்கு 5 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

# வாகரை கண்டலடி கடற்கரையில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு




மட்டக்களப்பு, மார்ச் 09

"பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறையை நிறுத்து" என்ற தொணிப் பொருளில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் நேற்று முன் தினம் வாகரை கண்டலடி கடற்கரையில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி மயூரி ஜனனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் என். தனஞ்சயன்,மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் சி குரூஸ், வாகரை பிரதேச செயலாளர் க.அருணன் மற்றும் கல்குடா வலயக் பிரதி கல்விப் பணிப்பாளர் ஜெயவதனன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு பராம்பரிய கலாசார இசையுடன் வரவேற்கப்பட்டனர். இறைவணக்கத்துடன் தீபச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டன.

மாணவர்களின் கலை நிகழ்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் ஒன்று கூடி இணைய வழி வன்முறை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்து, இணைய வழி வன்முறையை நிறுத்து, இணையத்தின் ஊடாக பெண்களை மிரட்டாதே என்பன போன்ற வாசகங்களை தாங்கிய பதாதைகளை கையில் ஏந்திய படி ஊர்வலமாகச் சென்றனர்.

கண்டலடி கடற்கரையில் அரம்பிக்கப்பட்ட பேரணி சுமார் 5 கிலோமீற்றர் தூரம் வரை சென்று வாகரை பொது மைதானத்தை அடைந்தது.

அங்கு பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல் தொடர்பான நாடகம், கவிதை, ஆங்கில பேச்சு,நாட்டுக் கூத்து என்பன நடைபெற்றது. (அ)

கல்வி tv CHANNEL-1

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இலவச கண் சிகிச்சை முகாம்

திருமலை, மார்ச் 09



திருகோணமலை ரோட்டரி கழகமும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த " குளோபல் ஹாண்ட் சரிட்டி" மற்றும் மில் பொய்ண்ட் ரோட்டரியுடன் இணைந்து இலவச கண் சிகிச்சை முகாமை கடந்த 6ஆம் திகதி கட்டைப்பறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்திலும், 7ஆம் திகதி அலஸ் தோட்டம் ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியால யத்திலும் சிறப்பாக நடத்தின.

இரு தினங்களும் சராசரி 500 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து பயன் பெற்றனர். கண்ணில் வெண்புரை உள்ள 100 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு மேலதிக சிகிச்சைக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. 200 இற்கும் மேட்பட்டவர்களுக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

திருகோணமலை றோட்டரி கழக அங்கத்தவர்களும் உதவியாளர்களும் இதில் பங்கேற்றனர்.

# பொய் கூறி இனக்குரோதத்தை உருவாக்குகிறார் சாணக்கியன்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு



அம்பாறை, மார்ச் 09

**கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற பெயரில் செயலகம் ஒன்று இல்லாத நிலையில் அப்படியொன்று இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பொய் சொல்லி தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இனக்கு ரோதத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதாக ஐக்கிய காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது.**

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்திருப்பதாவது:- 1993ஆம் ஆண்டு முதல் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இயங்குவதாக சாணக்கியன் எம் பி உரையாற்றியுள்ளார். கல்முனையில் இன்று வரை இருப்பது கல்முனை செயலகம் என்ற ஒரேயொரு செயலகம் தான். கல்முனையில் வடக்கு செயலகம் என்றோ, தமிழ் செயலகம் என்றோ முஸ்லிம் செயலகம் என்ற செயலகங்கள் இல்லை. கல்முனை செயலகத்தின் கீழ் உப செயலகம் ஒன்றே உள்ளது.

ஆனால் ஒரு பொய்யை பல தடவைகள் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்ற தந்திரத்தில் இனவாத தமிழ் அரசியல் வாதிகள் தொடர்ந்தும் இப்பொய்யை சொல்லி வருகிறார்கள்.

இவ்வாறு சாணக்கியன் பேசும் போது அதற்குரிய சரியான விளக்கத்தை கொடுக்க கல்முனை முஸ்லிம்களின் அதிகபட்ச ஓட்டுப்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் அக்கட்சி எம்பீக்களும் மௌனமாக இருப்பது முஸ்லிம்களுக்கு செய்யும் துரோகமாகும்.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் ஐந்து உறுப்பினர்களை கொண்ட அ.இ. மக்கள் காங்கிரஸ் தலைவருக்கும் இதன் உண்மைத்தன்மை தெரியாமல் இருக்கிறாரா என்று கேட்கிறோம். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களை ஏமாற்றி வயிற்றுப்பிழைப்பு நடத்துகிறது என்பதனால்தான் மக்கள் காங்கிரசை மாற்றீடான கட்சியாக பார்த்தோம். ஆனால் அக்கட்சியும் மு. கா போன்றே செயல்படுகின்றது.

நாய்க்கு எங்கு அடிபட்டாலும் காலை தூக்கி கத்துவது போல் நாட்டில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்முனை பற்றி கத்தி நாட்டு பிரச்சினையை திசை திருப்புவர். அது போல் கல்முனை மாநகர சபை ஊழல் பற்றி நாடு பேசுகையில் தமிழ் எம்.பிக்கள் இதனை திசைதிருப்புவதற்காக ரவூப் ஹக்கீமால் ஏவப்பட்டுள்ளார்களா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

ஆகவே இனியும் இல்லாத ஒரு செயலகத்தை உள்ளது என சொல்லி தமிழ் மக்களை உசுப்பேற்றுவதை தவிர்த்து கல்முனை தமிழ் மக்களுக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சியினால் பிரேரிக்கப்பட்ட "பாண்டிருப்பு, சேனைக் குடியிருப்பு செயலகம்" ஒன்றை உருவாக்க முன்வரும்படி தமிழ் கட்சிகளை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

(அ-06)

# விவேகானந்த மனித வள மேம்பாட்டு நிலையம் காரைதீவில் திறந்துவைப்பு

அம்பாறை, மார்ச் 09

காரைதீவு சாரதா சிறுமியர் இல்லம் இருந்த இடத்தில் விவேகானந்த மனித வள மேம்பாட்டு நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் வேலூர் தலைமையக உதவிப் பொதுச்செயலாளர் சிறிமத் சுவாமி சத்யேஷானந்தஜி மஹராஜ் இதனைத் திறந்து வைத்தார்.

கூடவே இல்லத்தில் புத்தக்கூடம், அலுவலகம் மற்றும் கணினி ஆய்வு கூடத்தையும் அவர் திறந்தார்.

அவருடன் இராமகிருஷ்ண மிஷனின் இலங்கை கிளைத் தலைவர் சிறிமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹராஜ், மட்டக்களப்பு மிஷன் பொது முகாமையாளர் சிறிமத் சுவாமி நீல மாதவானந்தஜி மஹராஜ், உதவி முகாமையாளர் சிறிமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள்,அறநெறி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# பிஞ்சு மனங்களில் நஞ்சு விதைக்காதீர்!

## தவிசாளர் ஜெயசிறில் கோரிக்கை

அம்பாறை, மார்ச் 09

"குழந்தைகளின் நிகழ்வுகளில் அரசியல் அல்லது இனவாதம் பேசாதீர்கள். பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைக்காதீர்கள்."

-இவ்வாறு மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற முன்பள்ளி நிகழ்வொன்றில் உரையாற்றிய காரை தீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்தார்.

மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசா லைகள் சம்மேளன மாணவர்களின் வருடாந்த கலை நிகழ்ச்சியும், பரிசளிப்பும் சம்மேளனத் தலைவர் எம்.எச். எம். அஸ்வர் தலைமையில் மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் மேலும் தெரிவிக்கையில்- காரைதீவு பிரதேச சபைக் காலத்தில் நாங்கள் கூடிய அபிவிருத்தியை செய்தது மாவடிப்பள்ளியில் தான். இனமத பேதமில்லாமல் நான் சேவையாற்றியுள்ளேன். என் மீது பலரும் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். இந்த மேடையிலும் இனவாதக் கண்ணோட்டத்துடன் மின்விளக்கு தொடர்பாக கோரப்பட்டது. அரசியல் இனவாதம் பேசுவதற்கு இது உரிய இடமல்ல. எனவே வேறு பொது இடத்தில் அழைத்தால் விமர்சனங்களுடன் நான் நேரடியாக விவாதிக்க தயாராக உள்ளேன்.

கொரோனா காலத்தில் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டபோது முஸ்லிம்களுடன் சேர்ந்து நான் போராடியபோது தாம் எதுவும் செய்யாமல் முடங்கி கிடந்து மொட்டுக்கு ஆதரவு திரட்டியவர்கள் இப்போது தான் வெளியே வந்து தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்ள, என்னை இனவாதியாக சித்தரிக்கிறார்கள். நான் கொரோனா காலத்தில் நிறைய உதவிகளை முஸ்லிம்களுக்கும் செய்துள்ளேன். நீர் இணைப்புக்களை, மின்சார இணைப்புக்களை கூட எனது சொந்த நிதியில் வழங்கியுள்ளேன்.அதனை விளம்பர படுத்தவில்லை. நான் மக்களுக்காக மக்களுடன் பயணிக்கிறேன். விமர்சனங்களையிட்டு நான் அலட்டிக்கொள்வதில்லை.

காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதி தெரு விளக்குகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொருத்தியபோது எங்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

பொருத்திய பின்னர் அதற்கான மாதாந்த மின்கட்டணத்தை செலுத்துமாறு எம்மிடம் கேட்டனர்.

எம்மிடம் கேளாமல் எந்த அனுமதியையும் பெறாமல் செய்த வேலைக்கு நாம் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் சபையில் உறுப்பினர் றனீஸ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதனைப் பொறுப்பேற்றோம்.

அதனை நாங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டபோது, அவர்கள் அது தமக்குச் சொந்தமான வேலை



யென்றும் அதை நாங்கள் தடுக்கப்போகின்றோம் என்ற தோரணையிலும் கருத்து வெளியிட்டனர்.

உண்மையில் இந்த வீதி காரைதீவுக்கோ மாவடிப்பள்ளிக்கோ மட்டும் உரித்தானதல்ல. நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து வரும் சகல பயணிகளுக்குமானது.

எனவே மக்கள் மற்றும் பயணிகள் நன்மை கருதி உடன்பட்டோம்-என்றார். (அ)

# காத்தான்குடியில் மகளிர் தினத்தில் பெண் ஆளுமைகளுக்கு கௌரவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 09



சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி, காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடு செய்த தமிழ் - முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிப்பும் விசேட மகளிர் தின கவியரங்கும் நடைபெற்றன.

கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில், காத்தான்குடி கலாநிதி அலவி சரிபுத்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

காத்தான்குடி நகர சபைச் செயலாளர் திருமதி றிப்கா சபீன், காத்தான்குடியின் முதல் பெண் இலிகிதர் திருமதி பரீனா றூஹுல்லாஹ், காத்தான்குடியின் முதல் பெண் நூலகர் திருமதி ஹமீதா சுபைர், காத்தான்குடி பொது நூலக பிரதம நூலகர் திருமதி கமலினி புஸ்பராஜா ஆகியோர் இதற் போது நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரி எம்.எம்.ஹாரீஸ் மதனி, கழகத்தின் செயலாளர் கலாபூசணம் காத்தான்குடி பாத்திமா உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (அ)

# ஈழத்து பழனி வேலோடுமலையில் சிறிசங்கர்ஜியின் மாசிமக யாகம்

அம்பாறை, மார்ச் 09

"ஈழத்து பழனி"என அழைக்கப்படும் கிழக்கில் சித்தாண்டி வேலோடும் மலை முருகன் ஆலயத்தில் மாசி மகத்தை ஒட்டி, உலக மக்கள் மேன்மை கருதி ஸ்ரீ சங்கர் ஜீயின் மாசி மகாயாகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி பௌர்ணமி அன்று நள்ளிரவு 12 மணிமுதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி வரை இந்த யாகம் நூற்றுக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வெகு சிறப்பாக இடம்பெற்றது.

அதற்கு முன்னதாக அடியார்கள் மூலிகை குளியலில் ஈடுபட்டனர். அங்கு உள்ள பதினெண் சித்தர்களுக்கு அபிஷேகம் இடம்பெற்றது.

(அ)

# உணவகமொன்றின் சமையலறைக்குள் நாய்

மட்டக்களப்பு, மார்ச் 09

உணவகமொன்றின் சமையலறையில் வளர்ப்பு நாயை வைத்துக் கொண்டு உணவு தயாரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்திலுள்ள உணவகமொன்றிலேயே நாய் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என மாமாங்கம் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.கிசாந்தராஜ் தெரிவித்தார் மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்திலுள்ள உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், வெதுப்பகங்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளினால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது உணவின் தரம் உணவுப் பொருட்களின் காலாவதி தினம், பொதியிடப்பட்ட உணவுப் பொருட்களின் லேபல் போன்றவை சோதனையிடப்பட்டன. இதில் சமையலறையில் நாய் வளர்த்த வர்த்தகர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் கூறினார்.

# அவுஸ்திரேலியாவை மிரட்டும் காட்டுத் தீ!



கான்பரா, மார்ச் 09

அவுஸ்திரேலியாவின் கிழக்கு பகுதிகளில் பல காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் அதிக தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் அந்த பகுதியில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் 10 முதல் 15 மீற்றர் உயரத்திற்கு தீச்சுவாலைகள் ஏற்பட்டுள்ளதாக தீயணைப்புப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

இதுவரையில் 33 கட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளது டன் அவற்றில் 10 காட்டுத் தீ சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் வெளியேறுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர், மேலும் சில சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பலத்த காற்று காரணமாக தீ வேகமாக பரவியதாக தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# தேர்தல்களில் சீனாவின் தலையீடு; சுதந்திரமான சிறப்பு விசாரணை!

## கனேடிய பிரதமர் அறிவிப்பு



ஒட்டாவா, மார்ச் 09

**சமீபத்திய தேர்தல்களில் சீனாவின் தலையீடு குறித்து, சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளர் விசாரணை நடத்துவார் என கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்தார்.**

நியமிக்கப்பட்ட புலனாய்வாளர், கடந்த 2019 மற்றும் 2021 பெடரல் தேர்தல்கள் பற்றிய வகைப்படுத்தப்பட்ட அறிக்கைகளை மதிப்பாய்வு செய்வார் மற்றும் எதிர்கால போட்டிகளுக்கான பரிந்துரைகளை வழங்குவார்.

போட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் பொது விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஒட்டாவாவில் உள்ள பார்லிமென்ட் ஹில்லில் ஊடகவியலாளர்களிடன் கருத்துரைத்த பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே, கனடாவின் இறையாண்மைக்கு சவால் விடுக்கும் அறிக்கைகள் ஆபத்தானவை என்றும், கனேடியர்களாகிய எங்களின் மையத்தையே தாக்கும் என்றும் கூறினார்.

'நான் ஒரு சுதந்திரமான சிறப்பு அறிக்கையாளரை நியமிப்பேன், அவர் ஒரு பரந்த ஆணையைக் கொண்டிருப்பார் மற்றும் தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்கும் நமது ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் நிபுணர் பரிந்துரைகளை வழங்குவார்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அறிக்கையாளர் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை, எதிர்வரும் நாட்களில் நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சீனா மற்றும் ஈரான் மற்றும் ரஷ்யாவின் தலையீடு முயற்சிகளை கனடா நீண்ட காலமாக அறிந்திருப்பதாக அவர் கூறினார்.

நாடுகளும், பல அரசு சாரா நிறுவனங்களும், நமது ஜனநாயகத்தில் மட்டுமல்ல, பொதுவாக நமது நாட்டில் தலையிட முயற்சித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், எந்தவொரு தேர்தல் தலையீட்டையும் சீனா மறுத்துள்ளது. இந்த கூற்றுக்கள் முற்றிலும் அடிப்படையற்றது மற்றும் அவதூறானது என்று அது கூறியுள்ளது.

(அ)

# மெக்ஸிக்கோவில் கடத்தப்பட்ட இரு அமெரிக்கர்கள் கொலை!

மெக்ஸிக்கோ சிற்றி, மார்ச் 09

வடகிழக்கு மெக்ஸிக்கோவில் எல்லையில் கடத்தப்பட்ட நான்கு அமெரிக்க குடிமக்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட நான்கு பேரில், இருவர் இறந்துவிட்டனர், ஒருவர் காயமடைந்துள்ளார், மற்றவர் உயிருடன் இருக்கிறார் என்று தமௌலிபாஸ் மாநில கவர்னர் அமெரிகோ வில்லார்ரியல் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட இருவரும் காயமடைந்த நபரும் ஆண்கள் என அதிகாரிகள் பின்னர் தெரிவித்தனர். குழுவில் பயணித்த ஒரு பெண் காயமின்றி இருந்ததாகக் கூறப்படுகிறது.

கடத்தல்களை வெள்ளை மாளிகை கண்டித்ததுடன், பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியது.

வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், இந்த வழக்கில் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் மெக்ஸிக்கோ அரசாங்கத்துடன் நெருக் கமாக பணியாற்றப் போகிறோம் -என்றார்.



வடக்கு கரோலினாவில் வசிப்பவர்கள் என குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்ட நான்கு அமெரிக்கக் குடிமக்கள், கடந்த வெள்ளியன்று டெக்ஸாஸிலிருந்து மெக்ஸிக்கோவின் மாடமோரோஸ் நகருக்குச் சென்றுள்ளனர். அப்போது அவர்களது வாகனத்து போதைப் பொருள் கடத்தல் குழு வழிமறித்து கடத்திச் சென்றது.

நான்கு பணயக்கைதிகள் ஆயுதமேந்திய நபர்களால் வாகனத்தின் பின்புறத்தில் ஏற்றப்பட்டதைக் காட்டும் வீடியோ பின்னர் வெளிவந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு மெக்ஸிக்கோ பெண்ணும் கொல்லப்பட்டதாக மெக்ஸிக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

போதைப்பொருள் வாங்கச் சென்றபோதே 4 பேரும் சிக்கியிருக்கலாமென நம்பப்படுகிறது.

மாடமோரோஸ் நகரத்தில் பலம் வாய்ந்த போதைப்பொருள் கும்பல்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிடுகிறார்கள்.

வன்முறைகளுக்கு மத்தியில், தமௌலிபாஸ் மாநிலத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான மெக்ஸிக்கோ மக்கள் காணாமல் போயுள்ளனர்.

(அ)

# 5 ஆயிரம் பேர் படுகொலை; பிரதமருக்கு எதிராக ரிட் மனு

காத்மண்டு, மார்ச் 09

நேபாளத்தில் ஆயுதப் போராட்டத்தின்போது 5,000 பேரது படுகொலைக்கு பொறுப்பேற்பதாக ஒப்புக் கொண்ட பிரதமர் புஷ்ப கமல் பிரசண்டாவுக்கு எதிராக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட ஞானேந்திர ஆரன் உள்ளிட்ட வழக்குரைஞர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். அதில், 5,000 பேரது படுகொலைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள பிரசண்டாவை விசாரணைக்கு உள்படுத்தி, உரிய தண்டனை பெற்றுத் தரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

சுமார் 10 ஆண்டுகளாக நேபாள அரசை எதிர்த்து பிரசண்டாவின் தலைமையிலான மாவோயிஸ்ட் அமைப்பு ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தது. இதில் 17,000 பேர் பலியானதாகக் கூறப்படுகிறது. பின்னர் அரசுடன் 2006 இல் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தையடுத்து அவர் ஆயுதங்களைக் கைவிட்டு அரசியலில் இறங்கினார்.

இந்த நிலையில், போராட்டத்தின்போது 5,000 பேரது உயிரிழப்புக்கு மட்டுமே தனக்கு பொறுப்பு உள்ளதாகவும், எஞ்சிய 12,000 பேரும் அரசால் கொல்லப்பட்டார்கள் எனவும் பிரசண்டா அண்மையில் கூறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# இஸ்ரேலிய படைகள் தாக்குதல் 6 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு



கொழும்பு, மார்ச் 09

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரமான ஜெனினில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஆறு பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் இந்த தாக்குதலில் 11 பேர் காயமடைந்துள்ளனர் என பலஸ்தீனிய சுகாதார அமைச்சு நேற்று புதன்கிழமை தெரிவித்துள்ளது.

ஒரு வீட்டை முற்றுகையிட்டு இஸ்ரேலியப் படைகள் ராக்கெட் தாக்குதலை நடத்திய காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இருப்பினும் கடந்த மாதம் மேற்குக் கரையில் இரண்டு இஸ்ரேலியர்களை கொன்ற துப்பாக்கிதாரியை தாம் அழித்து விட்டதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நப்லஸிக்கு தெற்கே உள்ள மற்றொரு அகதிகள் முகாமில் இஸ்ரேலிய படைகளின் மற்றொரு சோதனை நடத்தப்பட்டது.

அஸ்கர் அகதிகள் முகாமில் உள்ள கட்டடத்திற்குள் நுழைந்த இராணுவம், ஜெனினில் கொல்லப்பட்ட 49 வயதுடைய ஒருவரின் இரண்டு மகன்கள் உட்பட மூன்று பேரை கைது செய்தது.

# இம்ரான் கானுக்கான பிடியாணை நிறுத்தம்

இஸ்லாமாபாத், மார்ச் 09

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கைது செய்வதற்கான பிடியாணையை எதிர்வரும் 13ஆம் திகதி வரை நிறுத்திவைக்கும்படி அந்த நாட்டு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்தபோது, பெறப்பட்ட பரிசுகளை, குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு விற்றதாக இம்ரான் கான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், விசாரணைக்கு முன்னிலையாகாததால், அவரை கைது செய்ய, பிணை பெறமுடியாத வகையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.



இந்த பிடியாணையை நிறுத்திவைக்கும்படி இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இம்ரான் கான் நீதிமன்ற உத்தரவுகளை எப்போதும் பின்பற்றுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இம்ரான் கான் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவரை காவல்துறையால் கைது செய்ய முடியாது என்று அவரது சட்டத்தரணி சபையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த கோரிக்கையை நிராகரித்த நீதிபதி, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தை அணுகி பிடியாணை மீது தற்காலிகதடை பெறலாம் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, இம்ரான் கான் தரப்பில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு மீது விசாரணை நடத்திய உயர் நீதிமன்றம், எதிர்வரும் 13ஆம் திகதி வரை பிடியாணையை நிறுத்திவைக்கும்படி உத்தரவிட்டது.

(அ)



# நியூசிலாந்து - இலங்கை டெஸ்ட் தொடர் இன்று!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 09

நியூசிலாந்து - இலங்கை அணிகளிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) தொடங்குகிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற இந்தத் தொடர் இலங்கை அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இலங்கை டெஸ்ட் அணி திமுத் கருணாரத்ன தலைமையில் களமிறங்குகிறது. டெஸ்ட் போட்டி தவிர, 3 ஒருநாள் போட்டிகள், 3 இருபது - 20 தொடர்களிலும் களமிறங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி இன்று கிறிஸ்ட்சேர்ச்சிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டி 17ஆம் திகதி வெலிங்டனிலும் ஆரம்பமாகின்றன.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2-0 என முழுமையாக கைப்பற்றினால் வரும் ஜூன் மாதம் லண்டனில் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற வாய்ப்புள்ளது. இருப்பினும், இலங்கை அணியின் வாய்ப்பு என்பது அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளிடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டியின் முடிவை பொறுத்தே அமையும்.

இந்தப் போட்டியில் இந்திய அணி, அவுஸ்திரேலியாவை தோற்கடிக்க தவறினால் மட்டுமே இலங்கை அணிக்கான வாய்ப்புக்கு வழி பிறக்கும். இது ஒருபுறம் இருந்தாலும் நியூசிலாந்து மண்ணில் வெற்றி பெறுவது என்பது இலங்கை அணிக்கு சுலபமானதாக இருக்காது என்றே கருதப்படுகிறது. இதுவரை இலங்கை அணி, நியூஸிலாந்து மண்ணில் 19 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளது. இதில் இரு போட்டிகளில் மட்டுமே வெற்றிகண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருப்பினும் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற வேண்டும் என்ற நம்பிக்கையில் கடுமையாக போராடும் என்று நம்பலாம். (ஐ)

# ஐ. சி. சி. சிறந்த வீரர் பட்டியலில் ஜடேஜா!




டுபாய், மார்ச் 09

ஐ. சி. சியின் பெப்ரவரி மாத்துக்கான சிறந்த வீரர் பட்டியலில் இந்தியா வின் ஜடேஜா இடம்பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) ஒவ்வொரு மாதமும் சிறந்த கிரிக்கெட் வீரரை தெரிவு செய்து கௌரவிக்கிறது.

இந்நிலையில் பெப்ரவரி மாதத்துக் கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை களை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளை ஐ. சி. சி. அறிவித்தது.

இதன்படி பெப்ரவரி மாதத்துக் கான சிறந்த வீரர் விருதுக்கு இங்கி லாந்தின் ஹாரி புரூக், இந்தியாவின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா, மேற்கிந்தியத் தீவுகுளின் குடாகேஷ் மோடி ஆகியோர் தேர்வாகினர்.

இவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு சிறந்த வீரர் தெரிவு செய்யப்படுவார்.

## பொன் அணிகளின் போர்:

# இருபது - 20 போட்டியிலும் சென். பற்றிக்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், மார்ச் 09

பொன் அணிகளின் போரில் இருபது - 20 போட்டியிலும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இதன்மூலம் ஒரே ஆண்டில் இருநாள் துடுப்பாட்ட போட்டியிலும், ராஜன் கதிர்காமம் ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இருபது - 20 போட்டியிலும் சென். பற்றிக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாண கல்லூரி - யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிகள் மோதும் பொன் அணிகளின் போர் துடுப்பாட்ட போட்டிகளில் விளையாடியது.



முதலில் ஆடிய யாழ்ப்பாண கல்லூரி 86 ஒட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 10.2 ஓவர்களி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

ஆரம்ப வீரர்களில் ஒருவரான ஐ. ஜெஸ்டிகன் 2 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் மற்றைய ஆரம்ப வீரர் எம். சௌதியன், 3ஆம் இலக்க வீரர் பற்குணம் மதுஷன் ஆகிய இரு வரும் இணைந்து 47 பந்துகளில் 72 ஓட்டங்களைப் பகிர்ந்து சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தனர்.

இதில், சௌதியன் 42 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 69 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். பி. மதுஷன் ஆட்டம் இழக்காமல் 8 ஓட்டங்களைப் பெற்றார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண கல்லூரி அணி 19. 5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்ப்பாண கல்லூரியின் 4 வீரர்கள் அவசரத்தனத்தால் ரன் அவுட் ஆகியிருந்தனர். துடுப்பாட்டத்தில் பி. பிருந்தன் (28), ஐ. எமெக்சன் (14), எஸ். நர்த்தனன் (10) ஆகிய மூவரே இரட்டை இலக்கை எண்ணிக்கைகளைப் பெற்றனர். (ஐ)

# உத்தரபிரதேச அணியை வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்!

டில்லி, மார்ச் 09

இந்தியாவில் நடைபெற்று வரும் அங்குரார்ப்பண மகளிர் பிரீமியர் லீக் இருபது 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தனி நபருக்கான அதிகபட்ச ஒட்டங்களை உத்தரபிரதேச வாரியர்ஸ் அணி வீராங்கனை தாஹ்லியா மெக்ரா ஓட்டங்களை குவித்த போதிலும் டில்லி வெற்றி பெற்றது.

டில்லி - உத்தரபிரதேச அணிகள் மோதிய இந்தப் போட்டியில், டில்லி முதலில் துடுப்பெடுத்தாடி 211 ஓட்டங்கள் குவித்திருந்தது. பதிலுக்கு ஆடிய உத்தர பிரதேசம் 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 169 ஓட்டங்களையே எடுத்து 42 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தாஹ்லியா மெக்ரா அதிரடியாக ஆடி 50 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும் அவரின் அணி தோல்வியை தழுவியது.

தீப்தி சர்மாவுடன் 4ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களையும் தேவிகா வைத்யாவுடன் 5ஆவது விக்கெட்டில் 49 ஓட்டங்களையும் சிம்ரன் ஷய்க்குடன் பிரிக்கப்படாத 6ஆவது விக்கெட்டில் மேலும் 49 ஓட்டங்களை யும் தாஹ்லியா மெக்ரா பகிர்ந்திருந்தார்.

இந்த 3 இணைப்பாட்டங்களில் பங்காற்றிய தீப்தி சர்மா 12 ஓட்டங்களையும் தேவிகா வைத்யா 23 ஓட்டங்களையும் சிம்ரன் ஷய்க் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

முன்னதாக ஆரம்ப வீராங்கனை அணித் தலைவி அலிசா ஹீலி 24 ஓட்டங்களைப் பெற் றார்.

டில்லியின் பந்துவீச்சில் ஜெஸ் ஜோனாசன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

முன்னதாக டில்லி கப்பிட்டல்ஸ் 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 211 ஓட்டங்களை குவித்தது.

மெக் லெனிங், ஷபாலி வர்மா ஆகிய இருவரும் 37 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஷபாலி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆடிய மெக் லெனிங் 42 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 70 ஓட்டங்களைப் பெற்று 3ஆவதாக ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த, ஜெமிமா ரொட்றிகஸ், ஜெஸ் ஜோனாசன் இருவரும் மிகச் சிறப்பாக ஆடினர். இருவரும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டுக்காக 34 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

ஜெஸ் ஜோனாசன் 20 பந்துகளை எதிர்கொண்டு 43 ஓட்டங்களுடனும் ஜெமிமா ரொட்றிகஸ் 22 பந்துகளை எதிர்கொண்டு 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இதனிடையே அலிஸ் கெப்சி 21 ஓட்டங்களைப் பெற்றார். (ஐ)





# நெய்மருக்கு சத்திரசிகிச்சை!

பாரிஸ், மார்ச் 09

பிரேசில் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் பாரிஸ் சென். ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணிக்காகவும் விளையாடி வருகிறார்.

பிரான்ஸில் நடக்கும் லிகு -1 லீக் போட்டியில் கடந்த மாதம் நடந்த லில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாரிஸ் சென். ஜெர்மைன் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் போது நெய்மர் வலது கணுக்காலில் காயம் அடைந்தார். அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்து பார்த்ததில் கணுக்கால் தசைநாரில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது தெரியவந்தது.

இதனால், அவரை சத்திர சிகிச்சை செய்யுமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். இதையடுத்து அவருக்கு விரைவில் சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது. இதனால், அவர் அணிக்கு திரும்ப 3 - 4 மாதங்கள் ஆகலாம் என்று தெரிய வருகின்றது. (ஐ)



# மகிந்தவின் தலைமையில் முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் .09

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது பொருளாதார நெருக்கடி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் போன்ற விடயங்களுக்குப் பொதுஜன பெரமுன எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை முன்னோக்கிக்கொண்டு செல்லும் வழிகள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# 1 பில்லியன் டொலர் இந்திய கடன் கால எல்லையை நீடிப்பதற்கு பேச்சு

கொழும்பு, மார்ச் 09

**இந்தியா வழங்கிய 01 பில்லியன் டொலர் கடனை திருப்பி செலுத்தும் காலத்தை இந்த ஆண்டு இறுதி வரை நீடிக்க இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.**

மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை இறக்குமதிக்காக வழங்கப்பட்ட இந்த கடன் உதவி எதிர்வரும் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் பொருளாதாரம் முன்னேற்றம், அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிப்புக்கு மத்தியில் இந்த நீடிப்பு பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

குறித்த நிதியுதவியில் சுமார் 300 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை 6-12 மாதங்களுக்கு நீடிக்க அரசாங்கம் விரும்புவதாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்தியாவிடம் இருந்து எந்தவித உடன்பாடும் இதுவரை எட்டப்படவில்லை என நிதி அமைச்சின் வட்டார தாவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொள்வதற்கான சீனாவின் நிதி உத்தரவாதத்தை நேற்று முன் தினம் பெற்றுக் கொண்ட இலங்கை, இந்த மாத இறுதிக்குள் கடனுதவியை பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)

# கடன் மறுசீரமைப்பு முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டு

கொழும்பு, மார்ச் 09

கடன் மறுசீரமைப்புநடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்தோடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் தனது ருவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளது.

(அ)

# அரபு நாட்டுக்கு வேலைக்காகச் சென்ற கிளிநொச்சி பெண்ணை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 09

அரேபிய நாட்டிற்கு வீட்டுப் பணிப் பணிக்காகச் சென்ற பெண்ணொருவர் காணாமல் போயுள்ளார் என அவரது கணவர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு தெரியப்படுத்தி உள்ளார்.

பச்சிலைப்பள்ளி பகுதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 39 வயதுடைய கோமதி பஞ்சலிங்கம் என்பவரே அரபு நாட்டுக்கு பணிக்காகச் சென்றிருந்த நிலையில், காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் அவரது கணவர் தெரிவிக்கையில் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வீட்டுப்பணிக்காக மனைவி அரபு நாட்டுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து கடந்த இரண்டு மாதங்களாக பணம் அனுப்பியிருந்தார்.

இந்த மாதம் சம்பளம் அனுப்பவில்லை. அதனையடுத்து மனைவியுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, தொடர்பு கிடைக்கவில்லை. அதனால் அவர் பணிக்காகச் சென்றிருந்த வீட்டு உரிமையாளருக்கு தொடர்பை ஏற்படுத்தி விசாரித்தபோது, அவர் தப்பிச் சென்று விட்டார் என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

வீட்டு உரிமையாளரான பெண், எனது மனைவி, வீட்டின் முன்பக்க வாயிலாலேயே தப்பிச் சென்றார் என தெரிவிக்கிறார். அவரது கணவன் வீட்டு மாடியிலிருந்த ஏணியால் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவித்தார்.

அவர்களின் முரண்பாடான பதிலாலேயே எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மனைவி காணாமல்போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் உரையாடும் போது, பணிக்கு சென்றுள்ள வீட்டு உரிமையாளர்களுடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தனது தொலைபேசி மற்றும் கடவுச்சீட்டு என்பவற்றை பறித்து வைத்துள்ளதாகவும் அதனைத் தருமாறு கேட்டு முரண்பட்டதாகவும் என்னிடம் தெரிவித்தார்.

அந்நிலையில் கடந்த 4ஆம் திகதி முதல் மனைவியுடன் எந்தத் தொடர்பும் ஏற்படுத்த முடியவில்லை. அதனையடுத்து வீட்டு உரிமையாளர்களுடன் அரபு மொழியில் உரையாடிய போதே, மனைவி காணாமல் போயுள்ளதாக தெரிவித்தனர்.

எனது மனைவி தற்போது உயிருடன் இருக்கின்றாரா? அல்லது இல்லையா ? வீட்டு உரிமையாளரால் தாக்கப்பட்டு இறந்து விட்டாரா ? என பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்ய சென்றிருந்த போது, இவ்வாறு வீட்டுப் பணிக்காக செல்வோர் 2 வருடங்களைக் கடந்திருந்தால் மட்டுமே நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் பணிக்காக அனுப்பிய முகவர்களே அதற்கு பொறுப்பு எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நாட்டின் தலைவர் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் உடனடி நடவடிக்க மேற்கொண்டு எனது மனைவியை மீட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

(அ)

# தேர்தல்கள் நடக்கும் தினத்தையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்

## கிழக்கு மக்கள் குரல் அமைப்பு சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மார்ச் 09

தேர்தலுக்கு பொருத்தமான தினம் என எதிர்வரும் மாதம் 25ஆம் திகதியை தேர்தல்கள் ஆணையம் தெரிவித்திருக்கிறது. இதனை பொதுமக்கள் எதிர்பார்க்கவில்லை. உறுதியான தேர்தல்கள் நடக்கும் தினத்தையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர் என கிழக்கு மக்கள் குரல் அமைப்பின் செயல்பாட்டாளர் அருள் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்- தேர்தல்கள் குறித்து பொதுமக்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டு வருகின்றனர் அரசின் நாடகத்தின் ஒரு அங்கமாக இதனை பார்க்கின்றோம்.

எமது நாட்டை இந்தியாவுக்கு விற்கும் நடவடிக்கை அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கத்தில் இந்திய மீனவர்கள் எமது கடலை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றனர். மறுபுறத்தில் இந்தியாவின் எண்ணெய் விற்பனைக்காக திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிடம் தாரை வார்க்கப்படுகின்றன. இது இவ்வாறு இருக்க இப்போது இந்திய ரூபாயினை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பிலான ஒரு பேச்சும் நிலவி வருகிறது. உண்மையிலேயே இலங்கை என்பது ஒரு நாடா அல்லது இந்தியாவின் ஒரு பாகமா?

இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசின் செயற்பாடு எமது தேசிய பாதுகாப்பிற்கும் பொதுமக்களது பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒரு செயற்பாடாகவே உள்ளது - என்றார்.

(அ)

# பெப்ரவரியில் இலங்கையின் கையிருப்பு 4.5 வீதம் உயர்வு

கொழும்பு, மார்ச் 09

2023 பெப்ரவரி மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 2,217 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது ஜனவரி 2023 இல் உத்தியோகபூர்வ கையிருப்பு மதிப்பு 2,121 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 4.5 வீத அதிகரிப்பைக் குறிக்கிறது.

இருப்பினும், தற்போதைய உத்தியோகபூர்வ கையிருப்புகளில் சீனாவின் மக்கள் வங்கியின் நாணய பரிமாற்றச் சலுகையும் அடங்கும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(அ)

# அடுத்த இரண்டு வாரங்களில் 2.9 பில்லியன் டொலர் கடன்!

## நிதி அமைச்சு நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 096

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி அடுத்த இரண்டு வாரங்களில் கிடைக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் இது ஒரு நாட்டுக்குக் கிடைத்த தனித்துவமான சாதனை என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொள்வதற்கான சீனாவின் எழுத்துமூல உத்தரவாதம் நேற்று முன் தினம் இலங்கைக்கு கிடைத்திருந்தது.

இந்நிலையில் கடனுதவி எப்போது இலங்கைக்கு கிடைக்கும் என்ற கேள்விக்கு கருத்து தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு குறிப்பிட்டார்.

(அ)

## கோதுமை...

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், 450 கிராம் (ஒரு இறாத்தல்) நிறையுடைய பாணின் விலையை 10 ரூபாவினால் குறைத்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாண் தற்போது, 160, 170 மற்றும் 180 ரூபா ஆகிய வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக அண்மையில் வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்திருந்தது. (அ)

## உள்ளக...

இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற 6ஆவது மீளாய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த ஆண்டு மிகமோசமான பொருளாதார நெருக்கடியினால் இலங்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இருப்பினும் நாட்டுமக்களின் நலனை முன்னிறுத்தி இந்த நெருக்கடியிலிருந்து வெகுவிரைவில் நிரந்தரமாக மீள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு சமூக - பொருளாதார உறுதிப்பாட்டை அடைவதிலும், மீட்சியை நோக்கிப் பயணிப்பதிலுமே அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியது. அதனை சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய சர்வதேச பங்காளிகளுடனும் இணைந்து முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் பாராளுமன்றத்தில் அரசமைப்புக்கான 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை வலுப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, கடந்த ஜனவரி மாதம் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான சட்டம் ஊடாக தேர்தலின்போதான அநாவசிய செலவினங்கள் மட்டுப்படுத்தப்படுவதுடன், அச்செலவினங்கள் குறித்த வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கடந்த 2022 மார்ச் மாதம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

அடுத்ததாக சுயாதீன உள்ளகப் பொறிமுறைகளின் ஊடாக மனித உரிமைகளையும் நல்லிணக்கத்தையும் உறுதிசெய்வதில் இலங்கை முன்னின்று செயலாற்றி வருகின்றது. அதற்கமைய அரசமைப்பின் பிரகாரம் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பது குறித்தும், இலங்கைக்குப் பொருந்தக்கூடிய முறை எதுவென்பது குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

அந்த ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அமைச்சரவையில் அங்கம்வகிக்கும் அனைத்து அமைச்சர்களும் இணங்கியிருப்பதுடன், அதற்குரிய சட்ட வரைவை தயாரிப்பதற்கான அமைச்சரை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு அதன் பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது என்றார்.

அதுமாத்திரமன்றி நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயல்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் விசாரணை செயன்முறைகள், இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நிதி ஒதுக்கீடு, வட- கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற காணி விடுவிப்பு, நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சிக்கூட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் அவர் தனது உரையில் வெளிப்படுத்தினார். (ஐ)

## பருப்பு...

மொத்த விலை குறைப்பின் பயனை நுகர்வோர் பெற வேண்டும் என்று புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஒரு கிலோ சீனிக்கான இறக்குமதி வரி 50 ரூபாய் 25 சதமாக குறைக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு 7,000 கோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## தபால்...

நிமல் புஞ்சிஹேவா தெரிவித் தார்.

எனினும், தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில், இந்தத் திகதிகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு பொதிகளை எதிர்வரும் 21 ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானியை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களூடாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## பல்கலை...

தாரை பிரயோகம் செய்தமைக்கும் எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டமே இவ்வாறு கலைக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழில்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் பல்கலைக்கழக வளாகத்தில் முதலில் நடைபெற்றது.

பின்னர், கலைப்பீடத்துக்கு அருகில் இருந்து றோயல் கல்லூரியை நோக்கி போராட்டக்காரர்கள் எதிர்ப்பு பேரணியை ஆரம்பித்தனர். இந்தப் பேரணி தேசிய அருங்காட்சியகம் நோக்கி செல்ல முயற்சித்த போது கலகம் அடக்கும் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர்.

இதனிடையே, பொலிஸாருடன் பேசி தொடர்ந்தும் பேரணியை நடத்த மாணவர்கள் முயற்சித்தனர். ஆனால், பேரணி தொடர்ந்தும் முன்னோக்கி செல்ல பொலிஸார் மறுத்து விட்டனர். அத்துடன், அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறும் கூறினர்.

மாணவர்கள் கலையாததைத் தொடர்ந்து, பொலிஸார் மீண்டும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்கியதுடன் தண்ணீர் தாரைப் பிரயோகமும் செய்தனர். கண்ணீர் புகையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கேம்பிரிட்ஜ் பிளேஸை சுற்றியுள்ள பகுதிகளில் ஓடினர்.

இதனிடையே, வீதியில் பயணித்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கண்ணீர்ப்புகையால் பாதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர், அப்பகுதிக்கு இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர். எதிர்ப்பு நடவடிக்கையால் பிரதான வீதிகள் தடைப்பட்டன. இதனால், வாகனங்கள் உள்வீதிகளால் பயணித்தன. இதனால், பெரும் போக்கு வரத்து நெரிசலும் ஏற்பட்டது.

தொடர்ந்து போராட்டக்காரர்கள் றோயல் கல்லூரி அருகே தரையில் அமர்ந்து போராட்டங்களை முன்னெடுக்க முயற்சித்தனர். இதையடுத்து, அந்தப் பகுதியிலும் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டும் தண்ணீர் தாரைப் பிரயோகம் செய்யப்பட்டும் போராட்டக்காரர்கள் கலைக்கப்பட்டனர்.

இதன் பின்னர் எதிர்ப்பு பேரணி ஆரம்பமான இடத்திலேயே மீண்டும் கூடிய போராட்டக்காரர்கள், அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

# துறைமுக அதிகார சபைக்கு 1,500 கோடி ரூபாய் இலாபம்!

கொழும்பு, மார்ச் 09

தொடர்ச்சியான நட்டத்தை தவிர்த்து தற்போது துறைமுக அதிகார சபை ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

தொடர்ச்சியான நட்டத்தை தவிர்த்து தற்போது துறைமுக அதிகார சபை ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது. இலாபத்தை தொடர்ந்து தக்க வைக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் போராட்டங்களை நடத்தி துறைமுகத்துறையில் மீண்டும் நட்டத்தை ஏற்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. இவ்வாறான துறைகளில் இருப்பவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவது அந்தத் துறைக்கு எந்தவகையிலும் பொருந்தாது - என்றார். (ஐ)

## வடக்கின்...

மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு போட்டிக்கான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

இந்த இரு கல்லூரிகளின் துடுப்பாட்டப் போட்டியே யாழ்ப்பாணத்தில் முதலில் ஆரம்பமான பெருந்துடுப்பாட்ட போட்டியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதுகாப்பற்ற...

பொருளாதார மற்றும் பல்வேறு சமூக நெருக்கடிகளாலேயே சிறுவர்கள் இவ்வாறு பாதுகாப்பற்ற வாழ்க்கையை கொண்டுள்ளனர். இவ்வாறான சிறுவர்கள் அநாதை இல்லங்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கும் - வேறு மாற்று முறைகள் மூலம் அவர்களை பராமரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய மாற்று பாதுகாப்பு அமைப்பின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குருந்தூர்...

திணைக்களத்துடன் சேர்ந்து மறைமுகமான திட்டத்தை மேற்கொள்வதாக நாம் அறிந்தோம்.

குருந்தூர்மலையில் எந்தவொரு கட்டடமும் நிர்மாணிக்கப்படக்கூடாது. அது பாதுகாக்கப்பட வேண்டிய இடம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த வாரம் நானும் எனது நண்பரும் அந்த இடத்துக்கு சென்றிருந்தோம். அங்கு புதிய விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. 1933ஆம் ஆண்டு குருந்தூர் மலை முதலாவதாக புவிச்சரிதவியல் ரீதியாக அது ஓர் ஒதுக்கப்பட்ட இடமாக அடையாளம் காணப்பட்டது.

புவிச்சரிதவியல் திணைக்களத்திடமிருந்து நாம் ஒரு கடிதத்தை பெற்றுக்கொண்டோம். அந்த இடத்துக்கு சென்று அளவிடுமாறு நாம் குறிப்பிட்டோம். 2020 ஆண்டு இறுதியில் புவிச்சரிதவியல் திணைக்களம் அந்த இடத்துக்கு சென்று ஆய்வொன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வின் பின்னர் முதல் தடவையாக குருந்தூர் விகாரையாக குறித்த இடம் அடையாளம் காணப்பட்டது.

புவிச்சரிதவியல் திணைக்களம் அங்கு ஆட்களை அனுப்பி அதனை தோண்டி பார்க்குமாறு குறிப்பிட்டது. நில அளவை திணைக்களத்தால் குறித்த பகுதி குருந்தூர் விகாரை பகுதி என அடையாளம் காணப்பட்டது.

எனவே, நீதிமன்ற கட்டளைகூட இங்கு மீறப்பட்டுள்ளது. புராதான காலமாக தமிழ் மக்களுக்கு சொந்தமான இடத்தில் புதிய பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. எமது பிரச்னை என்னவெனில், தமிழ் மக்களும் புரதான பௌத்தர்களாக காணப்படுகின்றனர். இது பௌத்த வழிபாட்டு இடமாகக் காணப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால், இங்கு பௌத்த மக்கள் இல்லை. இது ஒரு புவிச்சரிதவியல் இடமாக அடையாளப்படுத்தப்பட்டு பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## முல்லைத்தீவு...

இந்தப் போராட்டத்தில், "ஏழு வருடங்களாக கிடைக்காத நீதி - ஐ. நாவே கண் திறந்து பார்", என்று பதாதைகளை எழுதியிருந்தனர். அத்துடன், அது சார்ந்த கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இறுதிப்போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி கடந்த 2017 மார்ச் 08ஆம் திகதி இவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நெல்லியடியில்...

கணவன் - மனைவி மட்டுமே வசித்து வந்தனர். இவர்கள் வழக்கு ஒன்றுக்காக நேற்று மல்லாகம் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தனர். காலையில் சென்ற இவர்கள் மதியம் திரும்பிய போது வீட்டின் கதவு உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த 33 பவுண் நகைகள் திருட்டுப் போனமை தெரிய வந்தது. இவ்வாறு திருடப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் 58 இலட்சம் ரூபாய் எனக் கூறப்பட்டது.

நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ-02)

## பயங்கரவாத...

மற்றும் கடன்சுமை என்பன சமூக, பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதற்கான நாட்டு மக்களின் இயலுமையில் தீவிர மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

இதேவேளை "இந்த நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதை இலக்காகக் கொண்ட கொள்கைகளில் சமத்துவமின்மை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டும். இதேபோன்று சமூகப் பாதுகாப்பு மற்றும் ஏனைய பொருளாதாரக் கூறுகளையும் மேம்படுத்தும் வகையில் அவை அமைய வேண்டும்.

மேலும், ஆட்சிநிர்வாகத்தில் நிலவும் ஊழல்மோசடிகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வை வழங்குவதுடன் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அந்தக் கொள்கைகள் பங்களிப்புச் செய்யவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவதுடன் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகள், கண்காணிப்புக்கள் என்பன முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

அத்தோடு "நிலைமாறுகால நீதியை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் செயல்திறன்மிக்க நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எமது அலுவலகம் தயாராக உள்ளது", என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# உள்ளக பொறிமுறையை வடக்கு மக்கள் ஏற்பதாக ஆணைக்குழு கூறியது பொய்!

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, மார்ச் 09

வடக்கு மாகாண மக்கள் உள்ளக பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளமை அப்பட்டமான பொய்யாகும். ஆணைக்குழுவின் பொய்யான கருத்துக்கு இந்த உயரிய சபை ஊடாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

- இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த பெப்ரவரி மாதம் வடக்கு மாகாணத்துக்கு வந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து ஜனாதிபதியிடம் மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. வடக்கு மக்கள் உள்ளக பொறிமுறையிலான விசாரணையை ஏற்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமான பொய்யை குறிப்பிட்டுள்ளதையிட்டு கவலையடைவதுடன், இந்த உயரிய சபை ஊடாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை இராணுவத்தின் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் உள்ளக பொறிமுறையை ஒருபோதும் ஏற்கவில்லை - ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. கடந்த 40 ஆண்டு காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல உரிமைகளை இழந்துள்ளார்கள். ஆகவே, வெளியக பொறிமுறை ஊடாகவே சிறந்த ஏற்றுக்கொள்ள கூடிய தீர்மானத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நாட்டில் நீதி என்பதொன்று கிடையாது. இதற்கு சிறந்த உதாரணமாக குருந்தூர் மலை விவகாரத்தை குறிப்பிட முடியும். குருந்தூர் மலையில் விகாரை அமைக்கும் பணிகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளபோதும் ஒரு தரப்பினர் நீதிமன்ற தீர்மானத்துக்கு எதிராக செயல்படுகிறார்கள். ஆகவே, இந்த நாட்டில் எவ்வாறு உரிமை இழந்த தமிழ் மக்கள் நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்? இதன் காரணமாகவே சர்வதேச நீதி பொறிமுறையை கோருகிறோம் - என்றார். (ஐ)

## மகிழ்ச்சியில் உள்ளார் ரணில்



கொழும்பு, மார்ச் 09

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வழங்கப்படவுள்ள கடன் தொகை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு மகிழ்ச்சியில் இருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், 3 பில்லியன் டொலருக்கும் குறைவான கடன் பெற்று நாட்டில் நிலவும் நெருக்கடியை தீர்க்க இயலாது எனவும் கூறினார்.

## மகிந்த ராஜபக்ஷவின் பயணத் தடை நீக்கம்



கொழும்பு, மார்ச் 09

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பயணத் தடையை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நீக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தென்கொரியாவில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குழு நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, 10 நாட்களுக்கு பயணத்தடையை நீக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## ஆறு வயதுச் சிறுமி மர்ம மரணம்

கொழும்பு, மார்ச் 09

பாணந்துறை - ஹிரண, பின்கெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 6 வயதுச் சிறுமி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஹிரண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாய் மற்றும் தாயின் சட்டரீதியற்ற கணவருடன் வசித்து வந்த குறித்த சிறுமி பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததாகவும், அவருக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி இதற்கு முன்னர் பல தடவைகள் தாயின் துணைவரால் தாக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கேட்டல் மற்றும் பேச்சு குறைபாடுகளை கொண்ட இந்த சிறுமியின் உடலில் பல தழும்புகள் மற்றும் வீக்கங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பாக சிறுமியின் தாயான 25 வயதான பெண்ணொருவரும், அவரது கணவர் எனக் கூறப்படும் 29 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

சடலம், பிரேத பரிசோதனைக்காக களுபோவில - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை ஹிரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சுகாதார தொழிற்சங்கம் பகிஷ்கரிப்பு; வவுனியாவில் மருத்துவ சேவை பாதிப்பு



வவுனியா, மார்ச் 09

சுகாதாரத் தொழிற்சங்கத்தின் ஒருநாள் அடையாள பணிப் பகிஸ்கரிப்பு வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இரத்து செய்யப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் குறித்த அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு வவுனியாவிலும் ஆதரவு வழங்கப்பட்டதுடன், தொழிற்சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் சுகவீன விடுப்பை பெற்று பகிஸ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் வவுனியா பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுகளை தவிர்ந்த ஏனைய சேவைகளில் தொய்வு நிலை ஏற்பட்டது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர் தொழிற்சங்கங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சுகாதாரத் தொழிற்சங்கங்களாலும் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் நேற்று காலை 6.30 முதல் இன்று காலை 6.30 வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவிடமிருந்து நிதி உத்தரவாதம் சர்வதேச நாணய நிதியம் பாராட்டு



கொழும்பு, மார்ச் 09

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட ஊழியர் ஒப்பந்தம் எதிர்வரும் 20ஆம் திகதி, நிறைவேற்று சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார்.

சீனா, இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் உள்ளிட்ட இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெறுவதிலும், தீர்க்கமான கொள்கை நடவடிக்கைகளை எடுப்பதிலும் இலங்கை அதிகாரிகள் அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு அவர் பாராட்டும் கூறினார்.

அத்துடன், இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட ஏனைய தரப்பினரிடம் இருந்து கடனுதவி பெறும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கும் என சர்வதேச நாணய நிதியம் கூறுகின்றது.

இதற்கிடையில், நாட்டின் கடனை மறுசீரமைப்பதற்காக இரு தரப்பு கடன் வழங்குபவர்களிடம் இருந்து 10 முதல் 15 ஆண்டுகள் வரை சலுகையை சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், சீனாவிடம் இருந்து இலங்கைக்கு 2 வருட காலநீடிப்பே வழங்கப்பட்டது. (அ)

# பணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஒன்றியம்!

கொழும்பு, மார்ச் 09

அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தீர்மானிக்கும் திகதியில் தாங்களும் பணிப்புறக் கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் குறித்த ஒன்றியம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட 40 தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தொழிற்சங்கம் நேற்று கூடி கலந்துரையாடியுள்ளது.

இதன்போது, இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப கொடுப்பனவுகளை வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத் துறையைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்கள் நாளைய தினம் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட திட்டமிட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.